श्री पुष्पदन्त विरचितं

शिव महिम्न स्तोत्रम् ॥

ஸ்ரீ புஷ்பதந்த முனிவர்

அருளிச்செய்த

சிவமஹிம்ந ஸ்தோத்திரம்

மூலமும்-உரையும்

1931

உ

ஸ்ரீ புஷ்பதந்த முனிவர்

அருளிச்செய்த

சிவமஹிம்ந ஸ்தோத்திரம்

மூலமும்

ஸ்ரீ சிவராமலிங்க சுவாமிகள்

எழுதிய

உரையும்

ஹிந்தி பிரசார் அச்சுக்கூடம்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.
1931.

விலை ரூ. 0-4-0.

இப்புத்தகம் கிடைக்குமிடம் :—

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மடம்,

வியாசர்பாடி,

பெரம்பூர் பாரக்ஸ் போஸ்டு

மதராஸ்.

முகவுரை.

பூவுலகிலோரரசன் றன்னாட்டிலோரிடத்தின் மணம்வீசு முயர் வகை மலர்கண் மலரும் பூம்பொழிலுண்டாக்கிக் காவலுடன் காத்து வந்தனன். கந்தருவர்த் தலைவராகிய புஷ்பதந்த முனிவர் ககன மார்க்கமா யிவ்வுலகிலுலவும்போ திவ்வனத்தைக் கண்ணுற்றனர். இம்மலர்களை நம்மருளிறைவர்க் காக்குவமெனக் கருதினர். பின்னாகாச வழிக்கொண்டு நந்தனவனம் புகுந்து நாண்மலர் நாடோறும் பறித் திரவியெழுமுன்னேகிக் கைலைமலையில் வீற்றிருக்குஞ் சாம்ப மூர்த்தியைப் பூசித்து வந்தனர். சோலையிற் பூக்கள் சோரம் போவதைக் காவலாளரும் காணமுடியாது காவலனுக் கறிவித்தார். இதைக் கண்டுபிடிக்க வரசன் பலவித சூழ்ச்சியெடுத்தும் பயன் படாம லமைச்சரோடாராய்ந் தோருபாயங் கண்டனன். அப்பொழிலின் மறைவாய்ப் பரசிவ நிருமாலியத்தைத் தூவுவித்தனன். வழக்கம் போன்று வந்த முனிவர் நிருமாலியத்தை யுணராதுத் தாண்டியு மிதித்தும் பூக்கொய்தெடுத் தாகாயவழிச் செல்லத் தொடங்கும்போதவ் வாற்றற் குறையவுங் காரணநோக்கிக் கண்டனர். இந்நிருமாலியத்தை யறியாதவமதித்ததா லன்றோ நமக்கிவ் விடையூறுற்றது. இக்குற்றம் பரசிவத்தருளானன்றித் தீர்க்கப் படாதென வுறுதிக் கொண்டனர். அவ்வருளுமவரது துதியாலெனக் கருதி, வேண்டுவார் வேண்டியதருளும் பேரருட் பரசிவத்தின் மங்கள மகிமைகளைத் தொகுத்து, முப்பத்திரண்டு சுலோகங்களாய வித்துதியை மொழிந்தார். அன்பருக்கருளுதலே சிந்தையுள்ள சிவபெருமான் றிருநோக்காற் கைலையடைந்தார். துதியின் சிறப்பாற் றிருவருளுற்றேமெனத் தன்பெருமை யெண்ணியதை வெள்ளிமலை வாயலில் வீற்றிருக்கு நந்திதேவரறிந்து நகைத்து, இம்முப்பத்திரண்டு சுலோகங்களை யறிவிக்க, முன்னமேயுள்ளனவென முனிவர் வெட்கித் தாழ்ந்தனர். இவரது வாக்குக ணறு மண மலர்மாலை யொத்தலா லிம்முனிபுங்கவர் புஷ்பதந்தரென்னு நாமஞ் சூடப்பெற்றார் போலும். இந்நூல் சிவபிரானது மகிமைகளைப் போற்றலால், சிவமஹிம்ந ஸ்தோத்திரமெனப் பெயர்பெற்

றது. அனேக வேதாந்த நூற்காசிரியரு மனேக நூற்குரை விரித்தோருமாகிய ஸ்ரீமதுசூதனசரஸ்வதி யென்ற பெரியாரிந்நூற்கு முரையெழுதி யுள்ளார். இவ்வுரையினாரம்பத்தின் முன்னாசிரியர்களின் விரிவுரைகளைத் தொகுத்துரைக்கின்றேன் என்றதா லிந்நூலிவர்க்குமுன் பலபெரியோர்களாற் பேணப்பட்டு முரைகளும் வரைந்தாரெனத் தெரிகின்றோம். இன்னும், அகோபலி யென்னும் விரிவுரையுஞ் சுபோதினி முதலிய சிற்றுரைகளு மிருக்கின்றன. இன்று முத்தர தேசங்களில் ஸ்ரீருத்திரத்திற்குப் பதிலாக விதைஜபித்தலோடு நாடோறுங் குருஸ்துதிப் புஷ்பாஞ்சலிக்கு மிதையே பயிலுகின்றார்கள். அதன்றியு மிந்நூலின் முடிவிற் கூறியபடி, பெருமையுட னரும்பயனளிப்பதுங் தேவதேவரின் திருவருளை விரைவிற் பெறற்குரியதுமான விதனை, நாடோறும் பாராயணஞ் செய்வோரடையும் பயன் பெரிதென்பது திண்ணம் சென்னை, ஆனந்தாசிரம சாதுமகாசங்கத்தின் சங்கமூர்த்தியாய் அனேக நூற்களை வடமொழியினின்றுந் தென்மொழியிற் பெயர்த்தருளிய வேதாந்த பாஸ்கர ஸ்ரீவீர-சுப்பைய ஞான தேசிகரவர்களிதனையும் விருத்தப் பாக்களாகச் செந்தமிழிற் பாடியுள்ளார்கள். இதற்குத் திருவண்ணாமலை-ஸ்ரீ சுப்பைய சுவாமிகளால் பதவுரையும் விரிவுரையுஞ் செய்யப்பட்டு வெளிவந்திருக்கின்றது. ஆயினும் இந்நூற் சுலோகங்களைப் படிப்போர்க்குதவி யாகுமாறு தமிழுரையும் வேண்டுமெனச் சாதுக்களு மன்பர்களும் வேண்டிக்கொள்ளவதற்குப் பண்டிதர்களன்றி யெனக்குத் தகுதியற்ற காரியமென மறுத்தும், அவர்களதாணைக்கும் அன்பிற்கும் வசப்பட்டு, அரியதுஞ் சிறந்ததுமானவிந்நூல் பரவுதற்கும் இதன் பொருளை யுணர விரும்பினோருக்குச் சிறிதுதவி யாகவும் என்மதியளவிற்குப் பதவுரையுடன் விளக்கவுரையும் வரையப்பட்டது. இது ஸ்ரீ மதுசூதன சரஸ்வதி சுவாமிக ளிதற்குச் செய்த வியாக்கியானத்தை யொட்டியதாகும். பிழையைப் பெரியோர் பேணாதிருக்கப் பெரிதும் வேண்டுகிறேன்.

ஓம் தத்சத்.

சிவராமலிங்கம்.

91/1

உ

ॐ गणेशाय नमः ।

ஸ்ரீ புஷ்பதந்த முனிவரியற்றிய

சிவ மஹிம்ந ஸ்தோத்திரம்.

ॐकारं बिंदु संयुक्तं नित्यं ध्यायंति योगिनः ।
कामदं मोक्षदं चैव ॐकाराय नमो नमः ॥

(அவதாரிகை) சிவபெருமானுடைய குணங்க ளளவில வாதலி னவையுணர்தற்கரியனவாகும், இங்ஙன முணர்தற் கியலாதனவாகிய வக்குணங்களைப் புகழ்தலாகிய துதிசெய்த லெங்ஙனங்கூடுமென்னு மையத்தை நீக்குபவராய்ச் சிவபெருமானைத் துதிக்கத் தொடங்குகின்றார்.

महिम्नः पारं ते परमविदुषो यद्यसदृशी
स्तुतिर्ब्रह्मादीनामपि तदवसन्नास्त्वयि गिरः ।
अथावाच्यः सर्वः स्वमतिपरिणामावधिगृणन्
ममाप्येष स्तोत्रे हर निरपवादः परिकरः ॥ (१)

(பதவுரை) हर=(பாபக்கூட்டங்களைக் கெடுப்பவராகிய) பரமேஸ்வரா, ते महिम्नः=தேவரீரது பெருமையினுடைய, परं पारम्=மேலான எல்லையை (முடிவை), अविदुषः = அறியாதவருடைய, स्तुतिः = போற்றுதலானது, असदृशी यदि= பொருத்த முடையதன்றாயின் (முடியாதாயின்) तत्=அஃ

தென்ன வியப்போ (வியப்பன்று), **ब्रह्मादीनाम्**=பிரமன் முதலானோருடைய, **गिरः अपि** = (துதிவடிவ) வாக்கும், **त्वयि**= தேவரீர் விஷயத்தில், **अवसन्नाः** =பொருத்தமற்றவைகளேயாகும் (முற்று முணர்ந்தோராலும் தேவரீரது குணங்கள் இத்துணையென்ன வுணரப்படா), **अथ**=அங்ஙனமாயினும், **स्वमतिपरिणाम अवधि**=தமது புத்தியின் அளவிற் கெட்டியவரை, **गृणन्**=துதிப்பவராய், **सर्वः**=எல்லோரும், **अवाच्यः**= பழிக்கப்படாதவராவர் (எனின்), **मम एषपरिकरः अपि**= என்னுடைய இந்த முயற்சியும், **स्तोत्रे**=(தேவரீரைப்) போற்றுவதில், **निरपवादः** = பழிக்கப்படுவதன்று.

(விரிவுரை) சிவபெருமானளவின்றிய குணங்களுடையவன், எனச் சாஸ்திரங்கள் கூறலால், அவைகளையுள்ளவாறளவற்றவைகளாகவே யுணர்தலாகிய முற்றறிவுடைய பிரமன் முதலானோரி னுணர்விற்குக் குற்றமின்றும். துதித்தற்கரியவெனக்கூறும் வழியானே யொருவருமறியாப் பெருமையுடையானெனக் கூறி யெல்லோர் துதியுந் தகுதியுடையதாமெனக் கூறியது மிகவுந் திறம்படப் போற்றியதாம். (1)

(அ - கை) முற்கூறிய வண்ணம் பரமேஶ்வரனைப் போற்றுவதி லயன் முதலானோருந் தன்னோடொப்பாவாரெனக் கூறுபவராய் மீண்டு மேத்தொண்ணு விறைவனெனப் பரமேஶ்வரனைப் போற்றுகின்றார்.

अतीतः पन्थानं तव च महिमा वाङ्मनसयो-
रतद्व्यावृत्त्या यं चकितमभिधत्ते श्रुतिरपि ।
स कस्य स्तोतव्यः कतिविधगुणः कस्य विषयः
पदे त्वर्वाचीने पतति न मनः कस्य न वचः ॥ (२)

(ப - ரை) (**हर** = பாபத்தை யொழிப்பவரே), **तव महिमा**=தேவரீரது (சகுண, நிர்க்குணப்) பெருமையானது, **वाङ्मनसयोः** மொழி மனங்களுடைய, **पन्थानम्** = வழியை, **अतीतः च** = கடந்துள்ளதே (எட்டாததே), **श्रुतिः अपि** = வேதமும் (அளவுபடுத்த வியலாமல்), **यं** = யாதொன்றை, **चकितम्** = வெருவி, **अतद्व्यावृत्त्या** = அது வல்லாததை நீக்குதலால் (இதன்றிதன்றென விலக்கிக் குறிப்பால்), **अभिधत्ते** = சொல்லுகின்றதோ (அதனுல்), **सः** = அப்பெருமையானது, **कस्य स्तोतव्यः** = எவருக்குத் துதிக்கத்தக்கதாகும் (எவராலேத்துதற் குரியது? இயலாதது; எதனுலெனின்), **कतिविधगुणः** = எத்துணைவகைக் குணங்களையுடையது [எண்ணிலவாதலால்], **कस्यविषयः** = யாருக்கறியப்படுவது (எவர்க்கு மறியப்படாதது, தர்மமற்றதால்), **अर्वाचीने पदे** = புதிய மூர்த்தத்தில், **कस्य मनः नपतति** = எவனுடைய மனம்பதியாது, **(कस्य) वचः न (पतति)** = எவனுடைய வாக்கு நேராது [துதியாது].

(வி - ரை) ஸகுணபட்சத்திற் பொருத்தமின்மை சிறிது நிகழாதிருக்கவும் நிர்க்குணபட்சத்திற் சுயம்பிரகாசத்திற் கயலால் விளங்குந்தன்மை நிகழாதிருக்கவும் வேண்டுமெனக் கருதலே வேதமஞ்சுதலாம். முன் சுலோகத்தில் யாவருந் துதிக்கலாமெனக் கூறி, இதிலொருவருமுணர்தலுந் துதித்தலுங் கூடாவென்றதால் முன்னுக்குப் பின் முரணுதலை யொழிக்க, நான்காமடியாற் கூறினர். புதிய மூர்த்தமென்றது அன்பர்கட் கருள்வான் வேண்டி இலீலையாக (விளையாட்டாக) க்கொண்ட மான், மழு, நீலகண்டம், பார்வதிபாக மிவைகளோடு விளங்கும் வடிவ முதலிய திவ்ய

மங்கள வடிவங்களாம். அதத்வ்யாவ்ருத்தி = தத் = பிரம்மம், அதத்=மாயையும் மாயாகாரியப் பிரபஞ்சமும், வ்யாவ்ருத்தி= நீக்குதல், என்பதாம். (2)

(அ - கை) இங்ஙனமாயினு முற்றறிவுடையோனுகிய பரமேஶ்வரன் புதிதல்லாத துதியால் மகிழ்ந்தருளான், ஆதலின் துதி பயனின்றியதாய் முடியுமெனின், இனிப் பயன் கூறும் வாயிலாய்த் துதிக்கின்றார்.

मधुस्फीता वाचः परमममृतं निर्मितवत-
स्तव ब्रह्मन्कि वागपि सुरगुरोर्विस्मयपदम् ।
मम त्वेतां वाणीं गुणकथनपुण्येन भवतः
पुनामीत्यर्थेऽस्मिन्पुरमथन बुद्धिर्व्यवसिता ॥ (३)

(ப - ரை) **ब्रह्मन्** = நீக்கமறநிறைந்தோய், **पुरमथन** = முப்புரமழித்தோய், **मधुस्फीता**=தேன்பெருக்கென்ன (இனிமையாய் விளங்கும் சப்தகுண வழகுடையதாய்), **परमं अमृतम्** = உயர்ந்த அமிர்தம்போன்று (அருத்தகுணமுடையதாய்) நிகழும் (வேதமாகிய), **वाचः** = மொழிகளை, **निर्मितवतः तव**=உரைத்தருளிய தேவரீருக்கு, **सुरगुरोः** = தேவர் தலைவனுகிய பிரமனுடைய, **वाक् अपि** = துதியும், **किं विस्मयपदम्** = வியப்பாகுமோ (ஆவதன்று), **भवतः** = தேவரீருடைய, **गुणकथनपुण्येन** = மங்கள குணங்களை யுரைத்தலாகிய புண்ணியத்தால், **मम** = என்னுடைய, **एताम्** = இந்த, **वाणीम्** - மொழியை, **पुनामि इति** = தூய்மையாக்கிக் கொள்வேனென்னுங்கருத்தால் [மொழித்திறத்தால் தேவரீரை மகிழ்விப்பேனெனுங் கருத்தின்றி], **अस्मिन् अर्थे** = இந்தத் துதியில்,

बुद्धिः व्यवसिता=(எனது) புத்தி முயல்கின்றது [நுழைகின்றது].

(கருத்து) சொல்லின் றூய்மையால் மனத்தூய்மை விரைவிலுளதாகுமென்று பயன் கூறினர். (3)

(அ - கை) பரமேஶ்வரன் துதிக்கப்படுபவனென்றுந் துதிபயனுடையதென்றுங் கூறி, அவ்வீஶ்வரனதுண்மையில் வழக்கிடுங் கொடியோரைக் கண்டிக்கும் வழியாற் றுதிக்கின்றார்.

तवैश्वर्यं यत्तज्जगदुदयरक्षाप्रलयकृ-
त्रयीवस्तु व्यस्तं तिसृषु गुणभिन्नासु तनुषु ।
अभव्यानामस्मिन्वरद रमणीयामरमणीं
विहन्तुं व्याक्रोशीं विदधत इहैके जडधियः ॥ (४)

(ப - ரை) **वरद**=விரும்பியவருளும் வள்ளலே, **जगत्**=உலகத்தின், **उदयरक्षाप्रलयकृत्**=ஆக்கல் காத்தலழித்தல்களைச் செய்கின்றதாயும், **गुणभिन्नासु**=(சத்துவ முதலிய) குணங்களா லொன்றற்கொன்று வேற்றுமையாய், **तिसृषु तनुषु**=(விநோதமாய்க் கொண்ட பிரமன் முதலான) மூன்றுடல்களில், **व्यस्तम्**=வெளிப்படுகின்றதாயும், **त्रयीवस्तु**=மூன்று வேதங்களான் மொழியப்படும் பொருளாயும் விளங்குவது, **यत् तत् तवैश्वर्यम्**=யாது, அத்தகைய தேவரீரது ஈஶ்வரத்தன்மையை, **विहन्तुम्**=(ஒப்பாது) மறுப்பதற்கு, **अस्मिन्** = இம்மூவுலகினும், **अभव्यानाम्** = நலனிலாதார்க்கு (பாபிகட்கு), **रमणीयाम्**=விருப்பமாயும், **अरमणीम्**=(உண்மையில்) வெறுக்கத்தக்கதாயுமான, **व्याक्रोशीम्** =

பெருங் கூக்குரலாகிய வினவை, **इह** = இவ்வுலகில், **एके जडधियः** = சில வெளிற்றறிஞர்கள் [கூர்மையற்ற அறிவாளிகள்], **विदधते** = பேணுகின்றனர்.

(வி - ரை) உலகின் றோற்ற முதலியவைகளைச் செய்வதாயும் மும்மூர்த்திகளிடத்தில் வெளிப்படுவதாயும் வேதப் பொருளாயுமுள்ள யாதொரு ஈஸ்வரத்தன்மை (ஐஸ்வரியம்) யுளதோ வத்தகைய வைஸ்வரியத்தை மறுக்க எனக் கூட்டுக. **रमणीयां, अरमणीम्** இவ்விரண்டும் **व्याक्रोशीम्** என்பதன் விசேடணம். மறுத்தற்கு வினவைச் செய்கின்றனர் என்பதாம். மும்மூர்த்தி யென்றமையின் அவதார வடிவங்களனைத்திற்கு முபலக்ஷணம். உலகுதயம், என்றனுமானமும், வேதங்களாலென்றுகமமும், பிரமன் முதலிய மூன்று வடிவங்கள், என்று பிரத்தியக்ஷமுமாகிய பிரமாணங்களுரைக்கப்பட்டன. இதனல் மூன்றிலடங்கிய வெல்லாப் பிரமாணங்களானுநிகழ்வதாகிய வீஸ்வரத்தன்மையைப் பற்றிய கூக்குரல் வெறுக்கத்தக்கதாயினும் பாபத்தின் முதிர்வால் மயங்கிய வறிவிற்குப் பிரியமாய்த் தோன்று மென்பதாம். (4)

(அ - கை) கூக்குரல் எத்தகைய தென்பதை யுரைப்பவராய்த் துதிக்கத் தொடங்குகின்றார்.

किमीहः किंकायः स खलु किमुपायस्त्रिभुवनं
किमाधारो धाता सृजति किमुपादान इति च ।
अतर्क्यैश्वर्ये त्वय्यनवसरदुःस्थो हतधियः
कुतर्कोऽयं कांश्चिन्मुखरयति मोहाय जगतः ॥ (५)

(ப - ரை) **स धाता**=அவ்விறைவனுகிய மஹேஸ்வரன், **त्रिभुवनम्** = மூன்றுலகங்களையும், **सृजति खलु**=தோற்றுவிக்கின்ருனன்றே, **किमीहः** = (அவருக்குச்) செயல்யாது, **किंकायः** = உடம்பு யாது, **किमुपायः** = துணைக் காரணம் யாது [நிமித்த காரணம்], **किमाधारः** = இருக்குமிடம் யாது, **किमुपादानम्** =முதற் காரணம் யாது [சமவாயி காரணம்], **इतिच**= என்பனமுதல் (மற்றுமாய), **अनवसर** = இடமின்றியதும், **दुःस्थः** (அதனுனே) நிலைபெருததுமான, **अयं कुतर्कः** = இத்தகைய கெட்ட தர்க்கம், **अतर्क्य**=தர்க்கித்தற்கெட்டாத, **त्वयि ऐश्वर्ये**=தேவரீருடைய ஈஸ்வரத்தன்மையில் [ஐஸ்வரிய விஷயத்தில்], **कांश्चित् हतधियः** = சில அறிவீனர்களை, **जगतः** = உலகினரையும், **मोहाय** = மயக்கும் பொருட்டாக, **मुखरयति**= வாயாடுதலைச் செய்கின்றது.

(வி - ரை) தருக்கம் அறிவீனர்களை வாயாடுதலைச் செய்கின்றது எனக் கூட்டுக. **खलु**, என்பது படைத்தலின் உறுதிப் பொருளிலும், **च** காரம் மற்றைய வினுக்களையுங் கொள்ளுதற் பொருட்டுமாம். சுருதிக் கொத்ததின்றிச் சுதந்தரமாய்ச் சொல்லலால் குதர்க்கம். கட முதலிய திருஷ்டாந்தத்தால் பூமி முதலியவற்றிற்குக் கருத்தா வுடைமை யுறுதிகொள்ளுமிடத்து குயவன் தன்னுடலினின்றுந் தோன்றிய சக்கரச் சுழற்சித் தொழிலாலச் சக்கரத்திடத்து நீர் முதலிய துணைக்காரணங்கொண்டு முதற் காரணமாகிய மண்ணைக் குடமாகச் செய்கின்ருன். இங்ஙனமே திருஷ்டாந்தத் தொப்புமையால் உலக கருத்தாவிற்கித்தனைக் காரணங்களைக் கொள்வோமாயின் நம்மைப் போன்றே யவனு மீஸ்வரனலனுவன். காரணங்கள் கொள்

ளாக்காற் கருத்தாத்தன்மைப் பொருந்தாமற் கருத்தாவில்லை யாகும், என்னும் "உபயதப் பாஶாரஜ்ஜு:[இருபக்கமுங் கயிற்றூற் பிணைத்த பசு] திருஷ்டாந்தமாம், என்று சொல் வதே குதர்க்கமாம். விசித்திர வளவற்ற வாற்றலுடைய மாயையா லனைத்தையு முண்டாக்குபவரும், கருதற்கியலா மஹத்துவமு முடையரானமையால் தருக்கத்திற்கப்பாற் பட்டவராயும், இறைவனிருத்தலால் **अनवसरकुतर्कः** என்றூர். காரியத்தன்மையானது கருத்தாத்தன்மையின் வியாப்தி யுடையது என்பதற்கு மாத்திரந் திருஷ்டாந்தமாம். சக காரிகளின் வியாப்தி யுடையது கருத்தாத்தன்மை யென்ப தன் றென்பதாம். (5)

(அ - கை) இங்ஙன மாறுபாட்டுத்தியை மறுத்துடன் பாட்டுத்தியைக் கூறுபவராய்த் துதிக்கின்றூர்.

अजन्मानो लोकाः किमवयववन्तोऽपि जगता-
मधिष्ठातारं किं भवविधिरनादृत्य भवति ।
अनीशो वा कुर्याद्भुवनजनने कः परिकरो
यतो मन्दास्त्वां प्रत्यमरवर संशेरत इमे ॥ (६)

(ப - ரை) **अमरवर**=உம்பர்க்கிறைவ, **लोकाः**=உலகங் கள், **अवयववन्तः अपि**=அவயவங்களுடையனவாயினும், **किं अजन्मानः** = உண்டாகாதனவா, **जगताम्** = உலகங்களி னுடைய, **भवविधिः** = தோற்றத் தொழில்(சிருஷ்டிக்கிரியை), **अधिष्ठातारम्** = கருத்தாவை, **अनादृत्य** = வேண்டாமல், **किं भवति** = உண்டாகின்றதா, **वा** = அல்லது, **अनीशः कुर्यात्**= ஈஶ்வரனுக்கு வேறுன ஜீவன் உண்டாக்குகின்றுனெனில்

(அப்போது), **भुवनजनने**=உலகத்தோற்றத்தில், **परिकरः कः** = கருவி யாது? [சாதனம் யாது?] (இங்ஙன மீஸ்வரனைச் சித்தஞ்செய்து முடிக்கின்றார்). **यतः** = எதனால் (தேவரீர் பிரமாணங்களெல்லாவற்றாலும் வெளிப்படையானவரோ அதனால்), **मन्दाः** = அவர்கள் மூடர்களே, **इमे**=இவர்கள், **त्वां प्रति**=தேவரீரைக்குறித்து (உம்முடைய இருப்பு விஷயத்தில், **संशेरते**=ஐயமுறுகின்றனர்.

(வி - ரை) முதற்கேள்வியால் அவயவத்தோடுங் கூடினமையான், மண்ணாதிகட் குற்பத்தியில்லை யென்னு மேது பொருந்தாதென்பதாம். இரண்டாவதாற் கருத்தாவுடைமையைச் சாதிக்குங் காரியத்தன்மை யேதுவானது பிறழ்ச்சியில்லாததால், அநைகாந்திக மன்றென்றதாம். மூன்றுவதால் தனதுடற்றோற்றத்தையுங் காணாத வநீஸ்வரனாகிய ஜீவனுக்கு விசித்திரமான பதினான்கு புவனங்களையுந் தோற்றுவித்தல் கூடாதென்றதாம். சுருதிக்குச் சாதகமான தருக்கமாத்திரம் அனுமானமாம், சுதந்தரமான அனுமானம், பிரமாணமன்றென் றறியத்தக்கதென்பதாம. (6)

(அ - கை) இவ்விதம் பரமேஸ்வரனிடத்துப் புறநோக்குடையாரை மறுத்துச் சாஸ்திரமனைத்திற்கு நேராகவோ வல்லது தொடர்பாகவோ (பரம்பரையாக) பரமேஸ்வரனிடத்திலேயே கருத்தென்றுரைக்கின்றார்.

त्रयी सांख्यं योगः पशुपतिमतं वैष्णवमिति
प्रभिन्ने प्रस्थाने परमिदमदः पथ्यमिति च ।
रुचीनां वैचित्र्यादृजुकुटिलनानापथजुषां
नृणामेको गम्यस्त्वमसि पयसामर्णव इव ॥ (७)

(ப - ரை) **त्रयी**=மூன்று வேதங்கள், **सांख्यम्** = ஸாங்கிய சாஸ்திரம், **योगः** = யோக சாஸ்திரம், **पशुपतिमतम्**= பாசுபதக்கொள்கை, **वैष्णवम्** = வைஷ்ணவ சாஸ்திரம் (பாஞ்சராத்திரம்), **इति** = என்னும், **प्रभिन्ने** = ஒன்றற்கொன்று மாறுபாடான, **प्रस्थाने** = சாஸ்திரங்களில், **रुचीनां वैचित्र्यात्** = இச்சைகளினது வேறுபாட்டால் (முற்பிறப்பின் வயத்தாலேற்பட்ட வாசனையின் வழி நாநாவகை விருப்பத்தால்), **इदं परं पथ्यं च** = இவ்வழியே (எல்லாவழிகட்கும்) மேலாயது நலமானதும், **अदः (परं पथ्यं) इति** = இம்மதமே மேலானது நலமானது மென்று, **ऋजुकुटिल** = நேரான (அல்லது) வளைவான, **नानापथजुषाम्** = பற்பல மார்க்கங்களில் பயிலும், **नृणाम्** = (அதிகாரிகளாகிய) மனிதர்கட்கு, **(ऋजुकुटिलनानापथजुषां) पयसाम्** = நேராக அல்லது பரம்பரையாக நாநாவழியிற் செல்லு நதிகட்கு, **अर्णव इव** = (அடையுமிடம்) கடலைப்போல், **त्वम् एकः** = பரமேப்வரராகிய தேவரீரொருவரே, **गम्यः असि** = அடையுமிடமாயிருக்கின்றீர்.

(வி - ரை) கங்கை முதலிய நதிகள் நேராகவும், யமுனை முதலிய நதிகள் கங்கை முதலியவற்றிற் கலந்து பரம்பரையாகவுங் கடலையடைகின்றன. இங்ஙனமே வேதாந்தக் கேள்வி, மனன, நிஷ்டையுடையோர்கள் நேரே பரமேப்வரனை யடைகின்றனர். மற்றைய வழிகளில் முயன்று பழகுவோர்கள் மனத்தூய்மை யொருமைப்பாடுகளின் ஏற்றத்தாழ்வால் தொடர்பாகவே பரமேப்வரனை யடைகின்றனர். நேர்வழி விரைவிற் பயன்றருவதாயினும், வாசனையால் நேரென்றுந் தொடர்பென்று முறுதிகாண்டற்கு வல்லுனராகாமையின் றொடர் நெறியே நேர்நெறியென மயங்கி முயல்கின்றன

ரென்பதாம். த்ரயீ யென்பது பதினெட்டு வித்தைகட்கு முபலக்ஷணமாம்.

இங்கு கூறிய பதினெட்டு வித்தைகள், ஆஸ்திகர் கொண்டுள்ள சாஸ்திரமனைத்திற்கு முபலக்ஷணமாம். அவையாவன :—இருக்கு, யசுர், ஸாமம், அதர்வணமென வேத நான்கும்; சிட்சை, கல்பம், வியாகரணம், நிருக்தம், சந்தசு, சோதிடமென வேதாங்கங்களாறும்; நியாயம், மீமாம்சை, தருமசாஸ்திரம், புராணமென வுபாங்கங்களுன்குமாக வித்தைகள் பதினன்காம். இவற்றோடாயுள்வேதம், தனுர்வேதம், கந்தர்வவேதம், அர்த்தவேதமென வுபவேதங்களுன்குஞ் சேர்த்துப் பதினெட்டு வித்தைகளென்று வழங்கப்படுவனவாம். உபபுராணங்கள் புராணத்திலும் ; வைசேஷிகம் நியாயத்திலும் ; வேதாந்தம் மீமாம்சையிலும் ; சாங்கியம், பாதஞ்சலம், பாசுபதம், வைஷ்ணவ முதலிய சாஸ்திரங்கள் மஹாபாரத விராமாயண விதிகாசங்கள் தருமசாஸ்திரத்திலு மடக்கமாம். மற்றைய வேகதேசிகளின் சாஸ்திரங்களு மிவற்றுளடங்குவனவாம். அங்ஙனங்கொள்ளின் மாத்தியமிகாதி நான்குவித சுகத மதத்தவரின் சாஸ்திரங்களும், திகம்பரரின் சாஸ்திரபேதங்களும் சார்வாகரின் சாஸ்திரமுமாக வறுவகை நாத்திகரின் சாஸ்திரங்களுங் கூறப்படவில்லையெனின், இவைகள் வேதத்திற்குப் புறம்பானவையாதலின் பரம்பரையாகவேனும் புருஷார்த்தத்திற் குபயோகமின்மையின் கொள்ளத்தக்கவையன்றும். இச்சுலோகத்தில் நேராகவுந் தொடர்பாகவும் புருஷார்த்தத்திற்கு வழியாய சாஸ்திரங்களே காட்டப்பட்டன. இவ்வித்தைகளின் பேதங்களும் பயனும் யாதெனிற் சுருக்கிக் கூறப்படுகின்றன.

தருமத்தையும் பிரமத்தையு முரைப்பதாயு மொருவராற் செய்யப்படாததாயும், பிரமாண வாக்கியமாயு மிருப்பது வேதமாம். இது மந்திரபாகம் பிராஹ்மணபாகமென விருவகையினதாம். யாகத்திற்குக் காரணவடிவமான திரவியந் தேவதைகளைக் கூறுவன மந்திரபாகங்கள். இவை இருக்கு, யசுர், சாமமென்று மூவகைப்படுவனவாம். பாதங்களாற் சேர்க்கப்பட்டுக் காயத்திரி முதலிய சந்தங்களோடு கூடிய மந்திரங்கள் இருக்குகள்; கீதத்தோடு கூடியவை சாமங்கள். இவ்விரண்டினும் வேறாயவை யசுரென்பனவாம்.

பிராம்மணமும் விதிவடிவம், அர்த்தவாதவடிவம், இவ்விரண்டின் வேறானதென மூவகையாம். இவ்விதியும் உற்பத்தி விதி, அதிகாரி விதி, விநியோக விதி, பிரயோக விதி யென நான்கு பேதமாம். ஒன்றைப் புகழ்தல், அல்லதிகழ்தலாகிய வாக்கியமர்த்தவாதமாம். இவ்வர்த்தவாதமுங் குணவாதம், அனுவாதம், பூதார்த்தவாதமென முப்பிரிவாம்.

வேதாந்த வாக்கியமோ கருமத்தைக் கூறாமையின் விதியிலும்; விதிகளனைத்தையுந் தனக்கங்கமாக்கிக் கொண்டு தானொன்றற்கு மங்கமாகாமையி னர்த்தவாதத்திலு மடங்குவதன்று. ஆதலாலிவ்விரண்டினும் வேறாயதாம்.

அதர்வணவேதம் யாகாதிகளுக் குபயோகமாகாவிடினும், சாந்திக, மாரண முதலிய கருமங்களைக் கூறுதலால், வேறான கருமத்திற்காம். இங்ஙனங் கருமகாண்ட, பிரம்ம காண்ட வடிவவேதம், அறம்பொருளின்பம் வீடென்னும் புருஷார்த்தகாரணமாம்.

வேதமந்திரங்கட்குச் சுரம் வர்ணமுச்சாரணம் வேண்டுவன. சுரமுமெழுத்துங் குறைவாக வுச்சரிப்பின் பயனைக்

கொடாததோடு மாறுபட்டபொருள் பயத்தலாற் கூறுபவர்க்குக் கேட்டை விளைவிக்கின்றது. ஆதலினெடுத்தல் முதலிய சுரங்களோடுயிர் முதலாய வெழுத்துக்களை யுணர்த்துஞ் சிட்சை வேதத்திற்கங்கமாம். இங்ஙனமே சப்தங்களின் குற்றமற்றதன்மையை யுணர்த்துவது வியாகரணமாம். வேதமந்திரங்களின் பொருளுணர்ச்சியின் பொருட்டுச் செய்யப்பட்டது நிருத்தம். மந்திரங்களின் சப்தஞானத்தின் பொருட்டுச் செய்யப்பட்டது சந்தசு. கருமங்களைச் செய்யக் காலத்தை யுணர்த்துவது சோதிடம். இவை வெவ்வேறு முனிவரால் வேதத்திற் கங்கங்களாக விளம்பப்பட்டன. இலௌகிகத்திற்கு மிவை யுரியனவாம். உபாங்கங்களுட் புராண மென்பது, உலகங்களின் றோற்றவொடுக்கம், அரசவம்சம், மன்வந்தரம், வம்சசரிதமாகிய வைந்தையு முணர்த்துவதாய், பிரம்ம முதலிய பதினெண்வகையாய் வியாசமுனிவராற் கூறப்பட்டது. நியாயசாஸ்திரம் பிரமாண முதலிய பதினறு பதார்த்தங்களைக் காட்டுவதாய்க் கௌதமராற் செய்யப்பட்டது. இனி மீமாம்சா சாஸ்திரமுங் கரும மீமாம்சை சாரீரக மீமாம்சை யென விருவகைத்தாம். கருமமீமாம்சைய் பன்னிரண்டத்தியாயமாய்ச் ஜைமினிமுனிவரா லுரைக்கப்பட்டது. இது தரும விசாரத்தை வலியுறுத்துவதாம். உபாசனையாகிய மனதின் கருமத்தைக் கூறுவதாய் நான்கத்தியாயமுடைய தேவதாகாண்டமு மிக்கரும மீமாம்சையிலடங்குவதாகி யச்ஜைமினி முனிவரானே மொழியப்பட்டது, சாரீரக மீமாம்சையும் பகவான் வியாசரால் நான்கத்தியாயமுடையதாகச் செய்யப்பட்டது. முதலத்தியாயத்தி லுபநிஷத்து வாக்கியங்களாகிய வேதாந்தங்களனைத்திற்கு நேராக வல்லது

தொடர்பாக வொரே பிரமத்திலே கருத்தென்று சமன்வயங் காட்டப்பட்டது.

இரண்டாமத்தியாயத்தி லிங்ஙனஞ் சமன்வயங் கூறுங் கான் மிருதி தருக்க முதலிய நூல்கட்கு மாறுபாடாதலை வினு விடையாக விரோதமின்மையை விளம்புகின்றது. மூன்று மத்தியாயம் பிரம்மஞானத்திற்குப் புறச்சாதனமு முட் சாதனமு முணர்த்துகின்றது. நான்காவதிற் சகுணப் பிரம்ம நிர்க்குணப்பிரம்ம ஞானங்களின் பலனவிலப்படு கின்றது. இவ்வாறு ஜீவப்பிரம்ம வேகத்துவ வனுபவ காரண மான விசாரத்தை விளம்புவதாய்ச் சருவ சாத்திரங்களையுந் தனக்கங்கமாகக்கொண்டு, அவற்றி னுட்கருத்தை விளக்கிச் சிரசாய்த் திகழு மிச்சாரீரக மீமாம்சை முத்திவிருப்பினராற் போற்றத்தக்கதாம். தரும சாத்திரங்கள் வருணவாச்சிரம வியல்புகளைக் காலங் தேச மதிகாரி தொழிலிவைகளை யறிந்து விதிப்பதாய், மனு பராசர் நாரதாதி யனேக முனிவரான் மொழியப்பெற்றனவாம். இவ்வுபாங்கங்களிற் கூறிய விட யத்தினுணர்வே யிவைகளின் பயனும்.

ஆயுள்வேதத்தைத் தன்வந்திரி முதலியோர் மொழிந் தனர். இதில் வியாதி, அதன் காரணம், வியாதி நீக்கம், அதன் காரணமிவைகளை யுரைப்பதால், ஊழாலன்றிச் செயற்கையான் வந்த வியாதியின் சிகிச்சை யுணர்வும் வைராக் கியமு மிதற்குப் பயனும். காமநூலு மாயுள்வேதத்தி லடக்க மாம். இந்நெறியினுலும் விஷயங்களிற்றுக்கமே பேறுதலின், விஷய வைராக்கியமே பயனும். தனுர்வேதம் நான்குபாத முடையதாய் விசுவாமித்திர முனிவரான் மொழியப்பட்ட தாம். இது விடும்படை, விடாப்படை, விட்டுவிடாப்படை,

இயந்திரப்படையென நான்குவித வாயுதங்களின் பிரயோகம், மந்திரம், அதிதெய்வ முதலியனதெரிந்து, அரசர்களு மவர்களைச் சேர்ந்தோருந் தீட்சை யாயுதப்பயிற்சி மந்திரசித்தி முதலியன வாசிரியன் மூலமாய்ப் பெறுதலை யுணர்த்துகின்றது, துஷ்டர், சத்துருக்கள், சோரர் முதலியோர்களினின்று மரசர் தேசத்தைக் காத்தல் பயனும். பரதர் செய்த காந்தர்வவேதத்தில், நடனங் கீதம் வாத்திய முதலியன காட்டப்பட்டு, தேவதையின் வழிபாடுஞ் சமாதியு மிதற்குப் பயனும். அர்த்த வேதமும் நீதிசாத்திரம் பாகசாத்திரம், இந்திரஜால முதலிய வறுபத்துநான்கு கலைகளுமாம்.

இவை நாநாமுனிவராற் செய்யப்பட்டு, இலௌகிக வடிவ வதனதன் பயன்களின் வேறுபாடு காணத்தக்கனவாம். இவ்வாறு வித்தைகளை, த்ரயீயென்னும் பதத்தாலுரைத்தார். இனி சாங்கிய சாத்திரங் கபில முனிவராற் கூறப்பெற்று மூவகைத் துக்க நீக்கமே புருஷார்த்த மென்றும், இதற்குச் சாதனம் பிரகிருதி புருஷர்களின் விவேகஞானமென்று முணர்த்துகின்றது. யோகசாத்திரம் பதஞ்சலி பகவானுன் மொழியப்பெற்று, இயமாதியஷ்டாங்க யோகங்களும் யோக விபூதிகளும் [சித்திகளும்] முத்தியுந் தெரிவிப்பதாம். சித்த விருத்தி நிரோதமாகிய நிதித்தியாசனம் பலனுகக் கொள்ளப் படுகின்றது. பாசுபத சாத்திரம் மகேசுரரால் பசுவினது பாச நீக்கத்தின் பொருட் டுரைக்கப்பட்டது. இதில் ஜீவனுகிய பசு, பதியாகிய வீச்சுரனிடஞ் சித்தத்தைச் சாவதானமாக்குதலாகிய யோகத்தாற் றுக்கநாசமாகிய முத்தி மொழியப்படுகிறது. வைஷ்ணவ சாத்திரமாகிய பாஞ்சராத்திரம் நாரதாதி முனிவர்களாலுரைக்கப்பட்டது. இதில்

வாசுதேவர் சருவகாரணர், இவரினின்றுஞ் சங்கர்ஷண னென்னுஞ் சீவனுண்டாகி யிவனினின்று மனமென்னும் பிரத்யும்நன், இவனினின்று மநிருத்தனென்னு மகங் காரனு முண்டாயினர். இவையெல்லாம் பகவானுடைய வம்சங்களே, அவரோடும் அபின்னமேயாமென்றும், வாசு தேவருடைய வழிபாட்டை முக்கரணங்களானு மியற்றிக் கிருதகிருத்தியனுகின்ருனென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின் றது. சைவமந்திர சாத்திரங்களும் வைஷ்ணவ மந்திர சாத் திரங்களு முறையே பாசுபதம் பாஞ்சராத்திரங்களி லடக்க மாம். இவ்வாறு சாத்திர வேறுபாடுகளிருக்கினு மாரம் பவாதம் பரிணுமவாதம் விவர்த்தவாதமென மூன்றி லனைத்து மடக்கமாம். அவையாவன; நான்கு பூதங்களின் பரமாணுக்க ளிரட்டையணு முதலிய முறையாக பிரமாண் டம் வரை யுலகத்தை யுண்டாக்குகின்றன. முன்னில்லாத வசத்தாகிய காரிய முண்டாகின்றது, எனத்தார்க்கிகரு மீமாம்சகரு மாரம்பவாதத்தை யறைந்தனர். முக்குண வடிவப் பிரதானமே மகதத்துவ முதலாக வுலகவடிவாய்ப் பரிணமிக்கின்றது. முன் சூக்குமமாயிருந்த சத்தாகிய காரி யமே வெளிப்படுகின்றதென சாங்கியயோக பாசுபதமதம் பற்றியவர் பரிணுமவாதத்தைப் பகர்ந்தனர். வைஷ்ண வரும் பகவானிடத்தினின்று முலகம் பரிணுமமாயிற் றென்பர். அத்விதீய பிரம்மம் மாயையினுற் பொய்யாக வுல கத்தைக் கற்பிக்கின்றதென பிரம்மவாதிகள் விவர்த்த பட் சத்தை விளம்பினர். வேதாந்த வாக்கியங்களாலுரைப்பதும் விவர்த்தவாதத்தை முடிவாயுடையதுமாகிய வேதபரமேஸ் வரரிடத்திலே நாநாநூலாசிரியராகிய வெல்லா முனிவரர்களுக்

குங் கருத்தாயினும், புறநோக்குடையோர் முதன்முதலிக் கருத்தைக்கொள்ளின், இக்கருத்தினுழையாது நாஸ்தி கத்தைப் பற்றுவரென்னுங் கருத்துட் கொண்டவர்களாய், இந்நாத்திகத்தை நீக்க வம்முனிவர் நாநாவகை நாட்டினர். ஆதலாலவர்களி னுட்கருத்தறியாத அவ்வச்சாத்திரங்கட்கு வேதவிருத்தக் கருத்தை விரித்து, அவ்வம் மதமே யந்தமாக் கொண்டுப் பற்பல நெறியைப் பற்றுவரென்றனர். (7)

(அ - கை) இங்ஙனமையமனைத்து மொழிக்கும் வாயிலாய்ப் பரமேஶ்வர நிலையை விளக்கி வெளிப்பட்ட மங்கள மூர்த்தமாகிய "**अर्वाचीने**" என முற்கூறிய சகுண சிவத்தைத் துதிக்கின்றார்.

महोक्षः खट्वाङ्गं परशुरजिनं भस्म फणिनः
कपालं चेतीयत्तव वरद तंत्रोपकरणम् ।
सुरास्तां तामृद्धिं दधति तु भवद्भूप्रणिहितां
नहि स्वात्मारामं विषयमृगतृष्णा भ्रमयति ॥ (८)

(ப - ரை) **वरद**=வள்ளலே, **तव**=தேவரீரது, **तन्त्र उपकरणम्**=குடும்பரக்ஷணையின் சாதனம், **महा उक्षः**=முதுமையான இடபமும், **खट्वांगम्**=கட்டுவாங்கமும், **परशुः** = கோடரியும், **अजिनम्**=தோலும், **भस्म**=நீறும், **फणिनः** = பாம்புகளும், **कपालं च**=தலையோடும், **इति इयत्**=என்னுமிவ்வளவேயாம், **सुराः तु**=தேவர்களோ, **भवद्भ्रू**=தேவரீரது புருவத்தசைவுமாத்திரத்தால், **प्रणिहिताम्**=அருளப்பட்ட, **तां तां ऋद्धिम्**=அந்தந்த மேலான செல்வத்தை, **दधति**=தரிக்கின்றார் [அடைகின்றார்கள்], **स्व आत्मारामम्**=தனதாத்மவடி

வத்திலின்புற்றிருப்பவனை, **विषय**=சத்தமாதிபுலன்களாகிய, **मृगतृष्णा**=கானனீர், **नहि भ्रमयति**=மயக்காதன்றே.

(வி - ரை) தண்டத்தினுனியி லெலும்பமைந்ததாய சிவபெருமானுடைய வாயுதம் கட்வாங்கமாம். இதை காபாலிகளிடத்துக் காணலாம். இடப முதலியனவே யுடைமையாதலாற் றரித்திரராகிய பரமேஸ்வரன், நமது வழிபாட்டான் மகிழ்ச்சியடையினும் யாது கொடுப்பரெனின், இந்திரன் முதலிய தேவர்கள் சிவபெருமானைப் போற்றிச் செல்வங்களை யடைகின்று ரென்றனர். பிறரைச் செல்வமுடையராகச் செய்வோர் தாமச்செல்வத்தினு மிக்கசெல்வமுடையோராயிருப்பரென்பதுலகறிந்ததே. இங்ஙனமாயின் சிவபரஞ்சுடரின் திருவருளால்தேவர்கள் செல்வராகவு மகாதேவரிடப முதலியவே யுடைமையான் வறியராகவுங் கூடுதலெங்ஙனமெனின், நான்காவது பாதத்தாற் கூறினர். தன்னுன் மானந்தத்தை யடைந்துள யோக புருடனே விஷயவாசையை யடையானென்னில் நித்திய முக்தனுகிய பரசிவத்தைப்பற்றி யுரைக்கவேண்டுவதென்னை யென்பது கருத்தாம். உண்மையிலோ புருடன், பிரதானம், மகதத்துவம், அகங்காரம், தன்மாத்திரை, இந்திரியம் பூதங்களாகிய விவ்வேழுந்தம்மை மறைத் திடபமுதலாக மகேச்சுரனை வழிபடுகின்றன வென்ப தாகமத்தின்றுணிபு. இவ்வுலக குடும்பத்திற்குத் தத்துவங்களே துணைக்காரணமென்ப துண்மைப் பொருளாம். (அ)

(அ - கை) இங்ஙனம் போற்றத்தக்க சிவபிரானுடைய சகுண நிர்க்குண வடிவங்கள் தாபிக்கப்பட்டன. இனித் துதியின் தன்மையைக் கூறுகின்றூர்.

ध्रुवं कश्चित्सर्वं सकलमपरस्त्वध्रुवमिदं
परो ध्रौव्याध्रौव्ये जगति गदति व्यस्तविषये ।
समस्तेऽप्येतस्मिन्पुरमथन तैर्विस्मित इव
स्तुवञ्जिह्रेमि त्वां न खलु ननु धृष्टा मुखरता ॥ (९)

(ப - ரை) **पुरमथन**=முப்புர மெரித்தோய், **कश्चित्**= ஒருவன், **सर्वम्**=எல்லா வுலகங்களையும், **ध्रुवम्**=நிலையுடையனவென்பான், **अपरः** = வேறொருவன், **इदं सकलम्**=இவ்வனைத்துலகும், **अध्रुवम्**=நிலையில்லன வென்பான், **परः** = (இவ்விருதிறத்தார்க்கும்) வேறனோன், **समस्ते अपि**=அனைத்துமாய, **एतस्मिन् जगति**=இந்தவுலகில், **व्यस्तविषये**= வேறு வேறு தருமமாகிய, **ध्रौव्य अध्रौव्ये**=நிலையுடைமையும் நிலையில்லாமையுமான விருபதார்த்தங்களாக விருக்கின்றன வென, **गदति**=கூறுவான், **तैः** = அவ்வாதிகளின் வசனங்களால், **विस्मितः इव**=வியப்பெய்தியவன் போன்று, **त्वाम् स्तुवन्**= தேவரீரைப்போற்றுகின்றவனாய், **न जिह्रेमि**=நாணுறேன் (என்னெனில்), **ननु मुखरता**=அங்ஙோ வாயாடுதல் (வாசாலம்) **खलु धृष्टा**=உண்மையில் வெட்கமின்றியதேயாம் [தைரியமாம்.]

(வி - ரை) ஒருவனோராச்சரியத்தைக்கண்டு வியப்புற்றதன்வசமாகியுலகோர் நகைப்பைக் கருதாமற்றொழிற்படுதல் போல், அவ்வாதிகளின் துநிவேற்றுமையைக் கண்டு யானுமதிசயப்பரவசனாய், இவன் துதிக்கவறியாதவனென வுலகினர் பரிகசிப்பதைக்குறித்து நாணுறாது தேவரீரைத் துதிக்கின்றேனென்பதாம். சாங்கிய, பாதஞ்சல மதம்பற்றியோர், உலகங்கள் பிறப்பிறப்பற்றனவாம் (வெளிப்படுதல் ஒடுங்குதல்களுக்

கே பிறப்பிறப்பென்று பேசப்படும். ஈஸ்வரனும் அசத்தின் தோற்றத்தை அல்லது சத்தினழிவைச்செய்யானுய்ச் சத்தின் (இருப்பின்) தோற்றவொடுக்கங்களையே பிரேரிக்கின்ருரென்பர், இது சத்காரியவாதமாம். சுகதமதானுசாரர் இவையனைத்தும் க்ஷணிகம் அர்த்தக்கிரியா காரியத்துவமே (பயனுடைத் தொழிலை யுண்டாக்குவதே) சத்தாம். ஒரு க்ஷணத்திலுண்டாகிய வர்த்தக் கிரியையின் முடிவி னடுத்தக்ஷணத்திலசத்தாம். ஆகவே ஈஸ்வரரும் க்ஷணிக விஞ்ஞான பரம்பரையாகலின் அசத்தினுற்பத்தியைப் பிரேரிக்கின்றனரேயன்றி சத்தின் ஸ்திரத்தன்மையையன்றென்பர். தருக்கமதஞ்சார்ந்தோர் இவ்விரண்டு கொள்கைகளையும் பொருதவராய் இவ்வுலகமழிவது மழிவின்றியதுமாய பொருளாகும். அதாவது ஆகாயங், காலம், திக்கு, ஆத்மா, மனங்களோடு நிலநீர் நெருப்பு வாயுக்களின் பரமாணுக்களும் நித்தியம், காரியத்திரவியங்களனைத்துமனித்தியம், பரமேஸ்வர ரழிபொருள்களின் ருேற்ற வொடுக்கங்களைச் செய்கின்ருரென்பர். இம்மூன்றுமதங்களுந் துவைதத்தை யொப்பலால் அத்விதீய சன்மாத்ர வடிவ பரசிவத்தின் பரிசங்கூடவவற்றிற்கின்று. இங்ஙனம் உபாதியோடு கூடிய வற்பவைஸ்வரியமாகத் துதித்தலெவ்விதத்தும் வெட்ககாரணமேயாம். இதனுல் அவ்வாதங்களனைத்தும் போலியென்றதால், அத்விதீயவாதமே வெட்கமின்றியதாலுண்மையென்று கூறப்பட்டது. இதனை त्वमर्कः என்பதாதியாற் கூறுவர். (9)

(அ - கை) இங்ஙனமொன்பது சுலோகங்களால் துதியின் சாதனத்தைக்கூறி, துதிக்கத் தொடங்குகையில் யாவரினு முதன்மையான வரிபிரமாக்களும் பரசிவத்தினரு

ளானே யப்பரசிவத்தைக் கண்கூடாகக் கண்டனரென்பதாக, அவ்விறைவனது முடிவிலாப் பெருமையை வெளிப்படுத்துபவராய்த் துதிக்கின்றார்.

तवैश्वर्यं यत्नाद्यदुपरि विरिंचिर्हरिरधः
परिच्छेत्तुं यातावनलमनलस्कन्धवपुषः ।
ततो भक्तिश्रद्धाभरगुरुगृणद्भ्यां गिरिश यत्
स्वयं तस्थे ताभ्यां तव किमनुवृत्तिर्न फलति ॥ (१०)

(ப - ரை) **गिरिश**=கைலைக்கிறைவ, **अनलस्कन्धवपुषः**= அக்கினிப் பிழம்பு மூர்த்தமாகிய, **तव**=தேவரீரது, **ऐश्वर्यम्**= மஹிமையை, **परिच्छेत्तुम्**=அளந்தறிவதற்கு, **विरिञ्चिः**= பிரமன், **उपरि**=மேல் (திருமுடியை) நோக்கியும், **हरिः**= மகாவிஷ்ணு, **अधः** = கீழ் (திருவடியை) நோக்கியும், **यत्नात्**= முயற்சியால் (தங்கள் முழுவலியளவும்), **यातौ**=சென்று, **अनलम् (न+अलम्)** = (அளந்தறிய) வலியற்றவர்களானார்கள், **ततः**=அதனால் (பின்னை), **भक्तिश्रद्धाभर**=அன்புவிசுவாசங்கணிரம்பிய, **गुरु**=சிரேஷ்டமான, **गृणद्भ्याम्**=துதிசெய்த, **ताभ्याम्**=அவ்விருவர்கட்கும், **स्वयं तस्थे**=அவர்களது முயல்வின்றித் தேவரீரே முன்னின்றீர், **तव अनुवृत्तिः** = தேவரீரது (திருவடிகளை) வழிபடலானது, **किं न फलति**=எதைக் கொடாது? (எல்லாவற்றையுங் கொடுக்கும்).

(வி - ரை) அவருடைய தூலவடிவமே யளந்தறிய முடியவில்லையெனில், அவருடைய சூக்கும வடிவத்தைப்பற்றியது தூரத்ததாம். இதனான் மிக்க கீர்த்திவாய்ந்தவருண் முதன்மையராஞேரும் பரசிவத்தின் திருவடித்தொழும்பின்றிய

வரை யறியவில்லையெனின் மற்றையோரைப்பற்றி யாதுரைப் பதென்று வழிபாடின்றிப் பயனின்றென்றெதிர்மறை முகத் தாற்கூறி, அவர்களின்செயல் பயனின்றியபின்னர் மனம்வாக் குக் காயங்களால் வழிபட, பரசிவந் தாமே தம் வடிவத்தைக் காட்டி யருளினரென்றதால், அவர்களுந் திருவடிக்கன்பு செய்தே திருவருள் பெற்றாரெனின், ஏனையோரைப்பற்றி யுரைப்ப தென்னையென வுடன்பாட்டானும் பரசிவத்தி னுண்மையன்பே பலனனைத்து மளிக்குமெனத் திடப்படுத் தினர். (10)

(அ - கை) அசுரனாகிய இராவணனுக்கும் பரசிவமருள் செய்தலைக் காட்டுபவராய்த் துதிக்கின்றார்.

अयत्नादापाद्य त्रिभुवनमवैरव्यतिकरं
दशास्यो यद्बाहूनभृत रणकण्डूपरवशान् ।
शिरःपद्मश्रेणीरचितचरणाम्भोरुहबलेः
स्थिरायास्त्वद्भक्तेस्त्रिपुरहर विस्फूर्जितमिदम् ॥ (११)

(ப-ரை) **त्रिपुरहर**=முப்புரமெரித்தோய், **अवैरव्यतिकरम्**= பகைவரினெதிர்ப்பின்றிய, **त्रिभुवनम्**=மூன்றுலகங்களையும், **अयत्नात्**=ஒரு வருத்தமுமின்றி, **आपाद्य**=சம்பாதித்த, **दश आस्यः** = இராவணனென்பான், **रणकण्डूपरवशान्**=போரினது தினவின் வசப்பட்டனவாகிய, **यद्बाहून्**=எந்த இருபது தோட்களையும், **अभृत**=தாங்கினனோ (அது), **चरणाम्भोरुह**= தேவரீரது திருவடித் தாமரைகட்கு, **शिरःपद्म**=தலைகளாகிற தாமரை மலர்களைக் (கொய்து), **श्रेणीरचित**=வரிசையாக அமைத்த, **बलेः** = [பூஜை] அர்ப்பணமாகிய, **स्थिरायाः** =

நிலைத்த, **त्वद्भक्तेः**=தேவரீரிடத்து (வைத்த) பக்தியினது, **विस्फूर्जितम्**=மேன்மைப்பயனாகிய, **इदम्**=இதுவேயாம்.

(வி - ரை) எத்தோள்களைத் தாங்கினனோ வது விது வேயாமெனக் கூட்டுக. இராவணனுடைய மிக்க வீரத் தன்மையைக் கேள்வியுற்ற விந்திரன் முதலானோருந் தங்கண் மேன்மைகளைவிட் டவனிடத்துக் குற்றேவல் செய்ததால் **अयत्नात् + व्यतिकरम्** என்றார். தன்னுடன் போர் புரியும் வீரரின்மையால் போரினவன் மிகுதியை **बाहून् + परवशान्** என்றார். ஆகவே தன்னுடைய கைகளாற் கொய்த தன்றலை களை சம்புவின்றிருவடிகட் கர்ப்பித்த திடபத்தியின் பிர பாவமே தோளின்றினவு நீங்காத வீரத்தன்மையா மென்பது பொருள். அமைத்தர்ப்பணமாக்கி நிலைத்த பக்தியெனக் கூட்டுக. பலி=பூஜைக்குரிய பொருள். (11)

(அ - கை) இங்ஙன மிராவணனுக்குப் பக்திவசத்தா லருள்புரிந்ததைக் காட்டிச் செருக்குற்றவவனையே தடிந் ததைக் காட்டுபவராய்த் துதிக்கின்றார்.

अमुष्य त्वत्सेवासमधिगतसारं भुजवनं
बलात्कैलासेऽपि त्वदधिवसतौ विक्रमयतः ।
अलभ्या पातालेऽप्यलसचलिताङ्गुष्ठशिरसि
प्रतिष्ठा त्वय्यासीद्ध्रुवमुपचितो मुह्यति खलः ॥ (१२)

(ப - ரை) **त्रिपुरहर**=முப்புரமெரிசெய்தோய், **त्वत्सेवा**= தேவரீருக் காற்றிய வழிபாட்டால், **समधिगतसारम्**=பெற்ற

வலியையுடைய, **भुजवनं** = தனது தோளிருபதையும், **त्वत् अधिवसतौ**=தேவரீரிருப்பிடமா யெழுந்தருளிய, **कैलासे अपि**= கைலைமலையிலும், **बलात्**=தன் திறத்தால், **विक्रमयतः**=வீரத் தொழிற்படுத்திய (கிளப்பி யெடுத்தலிற் செலுத்திய), **अमुष्य**= இவ்விராவணனுக்கு, **त्वयि**=தேவரீர், **अलसचलित अङ्गुष्ठ-शिरसि**=(திருவடிப்) பெருவிரனுனி சிறிதூன்றியபோதில், **पाताले अपि**=பாதாளமாகிய கீழுலகத்திலும், **प्रतिष्ठा**=(தான்) இருத்தற்கிடம், **अलभ्या आसीत्**=கிடைத்தற்கரிதாயிற்று (எதனுலெனில்), **उपचितः** = செல்வத்தால் மேன்மையுற்ற, **खलः**=தீயோன், **ध्रुवम्**=உறுதியாக, **मुह्यति**=(நன்றிமறத்தலாகிய) மயலுறுகின்ருன்.

(வி - ரை) தோள்கள் நெருங்கிக் கூடியிருத்தலால் வனமென்ருர். தேவரீரது கருணையாலே வலிபெற்று தேவரீரிருப்பிடத்தையே யெடுக்க முயன்றதாகிய செய்ந்நன்றி மறத்தலானது, தாங்கள் செல்வமடைந்த காரணங் கருதாது செருக்கடைதல் மூர்க்கரியல் பென்றதாம். த்வயி, என்பது அங்குஷ்ட சிரசியென்பதின் விசேஷணமானதால் ஏழாம் வேற்றுமையில் வந்தது. (12)

(அ - கை) சிவபெருமானிடத்திற் றன்பெருமையைக் காட்டிய விராவணன் மிகச் சிறுமையடைந்ததை முன்னர்க் கூறி யிப்போதப் பெருமானிடத்துப் பணிவுகாட்டிய பாணுசுரனது மேன்மையைக் கூறுகின்ருர்.

यदृद्धिं सुत्राम्णो वरद परमोच्चैरपि सतीं-
मधश्चक्रे बाणः परिजनविधेयत्रिभुवनः ।

न तच्चित्रं तस्मिन्वरिवसितरि त्वच्चरणयो-
र्न कस्या उन्नत्यै भवति शिरसस्त्वय्यवनतिः ॥(१३)

(ப - ரை) **वरद**=உயர்வருள் வள்ளலே, **परिजन** = தனக்கேவலாளராக, **विधेयः** = வயமாக்கிய, **त्रिभुवनः**=மூன்றுலகத்தோரையுமுடையனை, **वाणः**=பாணனென்னுமோரசுரன், **सुत्राम्णः**=இந்திரனுடைய, **परम उच्चैः सतीं**=மிக்க மேன்மையதாய, **ऋद्धिं अपि**=செல்வத்தையும், **अधःचक्रे (यत्)**= (தனக்குத்) தாழ்வாக்கியது யாதோ, **तत्**=அது, **त्वत्चरणयोः**= தேவரீர திருபதங்கட்கும், **वरिवसितरि**=வணக்கஞ் செய்த வணுகிய, **तस्मिन्**=(பிறரிடத்தில் வியக்கத்தக்கதாயினும்) அப்பாணுசுரனிடத்தில், **न चित्रं** = வியக்கத்தக்கதன்று (ஏனென்னில்), **त्वयि**=தேவரீரிடத்து (ச்செய்யும்), **शिरसः अवनतिः** = தலைவணக்கமானது, **कस्यै उन्नत्यै**=எந்த மேன்மையின்பொருட்டுத்தான், **न भवति**=ஆகாது ? [எல்லா மேன்மைகளையுமுடைய வீடு பேற்றையுங் கொடுக்கும்].

(வி - ரை) சிவபிரானது திருவடி வணக்கத்தின் பயனளவுபடுத்தப்படாததால், பாணனடைந்த வம்மேன்மை யப்பலத்திலொரு சிறியதேயாம். இதனல் யாவரினுமேலாந் தன்மையுங் கருதற்கரிய மகிமையு முடையர் மகாதேவரெனக் குறிப்பித்தனர். (13)

(அ - கை) காளகூட விஷமடக்கியதை வெளிப்படுத்துபவராய்த் துதிக்கின்றார்.

अकाण्डब्रह्माण्डक्षयचकितदेवासुरकृपा-
विधेयस्यासीद्यस्त्रिनयन विषं संहृतवतः ।

स कल्माषः कण्ठे तव न कुरुते न श्रियमहो
विकारोऽपि श्लाघ्यो भुवनभयभङ्गव्यसनिनः ॥ (१४)

(ப - ரை) **त्रिनयन**=முக்கண்ணு, **अकाण्ड** = (உரிய) காலமின்றி (வந்த), **ब्रह्माण्डक्षय**=மகாப்பிரளயத்தால், **चकित**= அஞ்சிய, **देवासुर** = தேவர்களசுரர்கள் (இவர்களிடத்து வைத்த), **कृपाविधेयस्य**=தயையின்வசப்பட்டவராய், **विषम्**= (காளகூடமெனப்பெயரிய) நஞ்சை, **संहृतवतः** = [வென்ற] உண்ட, **तव कण्ठे**=தேவரீரது களத்தில், **यः कल्माषः आसीत्**= எந்தக் களங்கமிருந்ததோ, **सः** = அந்தக் களங்கம், **(तवकण्ठे) श्रियम्** - தேவரீரது கழுத்தில் அழகை, **न कुरुते न**=செய்வதின் றென்பதின்ரும் (பின்னே வழகையே செய்வதாம்), **अहो**= ஆச்சரியம், **भुवन** = உலகினருடைய, **भयभङ्ग** = அச்ச மொழிப்பதில், **व्यसनिनः** = சிந்தையுள்ள தேவரீரது, **विकारः अपि** = வடிவவேறுபாடும், **श्लाघ्यः** = கொண்டாடத்தக்கதே யாம்.

(வி - ரை) பாற்கடல் கடையுங்காற் ரேன்றிய விஷச் சுவாலையைத் தாங்கவியலா தஞ்சியோடித் தம்பாலடைந்த தேவாசுரர் மாட்டுவைத்த கருணையாலும், மற்றையோர்க் கந்நஞ்சை யடக்க வலியிலதென்றுலகையோம்பவும், தாமே யுண்டாரென்பது புராணவரலாறு. மற்றச் செயலனைத்து மொழித்துக் காத்தலே கருதல்பற்றி **व्यसनम्** என்றார். இத ஞலே வுலகக்காப்பின் பொருட்டுண்டாய களங்கமுமணி கலனய்க் கொள்ளப்படுமென்பதாம். (14)

(அ - கை) காமனைக் காய்ந்ததைக் கூறுபவராய்த் துதிக் கின்ரார்.

असिद्धार्था नैव क्वचिदपि सदेवासुरनरे
निवर्तन्ते नित्यं जगति जयिनो यस्य विशिखाः ।
स पश्यन्नीश त्वामितरसुरसाधारणमभूत्
स्मरः स्मर्तव्यात्मा न हि वशिषु पथ्यः परिभवः (१५)

(ப - ரை) **ईश**=இறைவனே, **यस्य**=எவனுடைய, **विशिखाः** = பாணங்கள், **सदेवासुरनरे**=உம்பரவுணர் நரர் களுடன்கூடிய, **जगति**=மூன்றுலகத்தில், **क्वचित् अपि**= ஓரிடத்திலும், **असिद्धार्था**=தந்தொழிலைச் செய்யாது, **न निवर्तन्ते**=மீளாதனவாமோ (அதனுனே), **नित्यं जयिनः एव**=என்றும் வெற்றியே யியற்கையனுன, **स स्मरः**=அம் மன்மதன், **त्वाम्**=தேவரீரை, **इतरसुरसाधारणम्**=மற்றைய தேவர்கட்கொப்பாக, **पश्यन्**=கண்டு [கருதி], (தனது அம்புகளைத் தேவரீரிடத் தேவியதால்), **स्मर्तव्य आत्मा अभूत्**= நினைக்கத்தக்க வுடம்பினனுயினன், **वशिषु** = அவாவொடுக் கினவரிடத்தில் (செய்யும்), **परिभवः** = மதிப்பின்மை யானது, **न पथ्यः**=தனக்கு நன்மையாகாது [தனது கேட்டிற்கே காரணமாம்].

(வி - ரை) மாறன்றனுடல் பரசிவன்ற னுதற்கண்ணு லெரிக்கப்பட்டு, இன்றும் கண்ணிற் காண வியலாது கருதத் தக்க வடிவமானதால் **स्मर्तव्यात्मा** என்றுர். பொறியடக்க முடையயேனையோரை யிகழினுந் தன்னைக்கெடுக்குமெனின், உயர்முனிகட்கு மேலான பரமேஶ்வரனிடத்திற் செய்யு மதிப்பின்மை கேடுவிளைப்பதை யுரைக்கவும் வேண்டுங்கொ லென்பதாம். (15)

(அ - கை) உலகோம்ப நடம்புரிவதை யறிவிப்பவராய்த் துதிக்கின்றார்.

मही पादाघाताद्व्रजति सहसा संशयपदं
पदं विष्णोर्भ्राम्यद्भुजपरिघरुग्णग्रहगणम् ।
मुहुर्द्यौर्दौस्थ्यं यात्यनिभृतजटाताडिततटा
जगद्रक्षायै त्वं नटसि ननु वामैव विभुता ॥ (१६)

(ப - ரை) [ईश=இறைவ], **जगद्रक्षायै**=உலகைக்காப்பதற்கு, **त्वं नटसि**=தேவரீராடல்புரிகின்றீர், **पाद आघातात्**=தேவரீரது திருவடி (மிதியாகிய) இடியால், **मही**=பூமியானது, **सहसा**=விரைவில் [மிதிகொள்ளும்போதே], **संशयपदं**=சங்கடநிலைமையை, **व्रजति**=அடைகின்றது, **भ्राम्यत्**=சுழல்கின்ற, **भुजपरिघ**=தோள்களாகிய தண்டங்களால், **रुग्ण**=பீடிக்கப்பட்ட, **ग्रहगणम्** = நட்சத்திரக் கூட்டங்கள் பொருந்திய, **विष्णो :पदं**=அந்தரிட்சலோகம், **संशयपदं व्रजति**=துன்பநிலையடைகின்றது, **अनिभृतजटा**=கட்டவிழ்ந்து விரிந்த சடைகளால், **ताडिततटा**=அடிக்கப்பட்ட விளிம்பையுடைய, **द्यौः**=சுவர்க்க முதலிய மேலுலகங்கள், **मुहुः**=அடிக்கடி, **दौस्थ्यंयाति**=நிலைபெறுத்தன்மையை யடைகின்றன, **ननु**=அகோ, **विभुता**=தலைமை [பிரபு] த்தன்மையானது, **वाम एव**=பிரதிகூலத்தையே தருவதாம்.

(வி - ரை) வரத்தால் மிகுந்த வலிமையைப் பெற்ற ராக்ஷதன் மாலைக்காலந்தோறு முலகை யழிக்க வெண்ணுங்கால், அவ்வுலகைக் காத்தற்பொருட் டிறைவனாகிய பரமசிவம், தமது திருநடனத்தாலவனை மயங்குறச்செய்து, அவ்வெண்

ணத்தை மாற்றுவர். அவ்வாடல்புரியுங்கான் மூன்றுலகங் களுஞ் சிறிது துன்புறுவனவாம். முற்றுமுணர்ந்த விறை வனிங்ஙனந் துன்பந்தருமாடல் செய்வதென்னென்னில், அரசன் றனதுநிலத்தைக் காத்தற்பொருட்டுச் சேனையை நடத்திச் செல்லுங்கா லாங்குள்ளாரு மப்படையாற் சிறிது துன்புறுத லியல்பேயாமாயி னிறைவனே தன்றிருவடியைப் பெயர்த்துவைப்பின் மொழிவதென்னென்பதாம். பிரபுத் தன்மையான் மிக்க நன்மையுண்டாகுமிடத்துச் சிறிது துயருமொருதலையா னேருமென்பார் [ஏவ] என்றார். (16)

(அ - கை) கங்கை யணிந்துளதைக் காட்டுபவராய்த் துதிக்கின்றார்.

वियद्व्यापी तारागणगुणितफेनोद्गमरुचिः
प्रवाहो वारां यः पृषतलघुदृष्टः शिरसि ते ।
जगद्द्वीपाकारं जलधिवलयं तेन कृतमि-
त्यनेनैवोन्नेयं धृतमहिम दिव्यं तव वपुः ॥ (१७)

(ப - ரை) [ईश=இறைவா], **तारागण**=(தன்னிடத்தில் விழுந்திருக்கும்) நட்சத்திரக் கூட்டங்களால், **गुणित**= (வெண்மை முதலிய குணங்களின் சமானத்தால்) பெருக்க மானதும், '**फेन**=நுரையின், **उद्गमरुचिः** = பேரழகியதும், **वियत् व्यापी**=ஆகாயத்தை மூடிக்கொண்டதுமான, **वारां प्रवाहः यः** = நீர்ப்பெருக்காகிய கங்கை யாதோ (அது), **ते शिरसि**=தேவரீ ரது திருமுடியில், **पृषत लघु**=ஒரு நுண்டுளியின்டுளியாக, **दृष्टः**=காணப்பட்டது, **तेन**=(மற்றும்) அதனுல் [அக்கங்கை யால்], **जलधिवलयम्**=கடல் கூட்டங்களாகவும், **जगत्**=நில

வுலகத்தை, **द्वीपाकारम्**=ஏழு தீவுகளாகவும், **कृतम्**=செய்யப் பட்டது, **इति अनेन एव** என்ற இதனுனே [இக்குறியினுனே யே], **तव**=தேவரீருடைய, **दिव्यं वपुः** = தெய்வீகப்பிரகாசத் திருமேனி, **धृतमहिम**=எவற்றினும் பெரியதென்று, **उन्नेयम्**= கருதப்படும்.

(வி - ரை) தேவரானவரையும் நடத்துபவரென்பார் **दिव्यं** என்ருர். தேவரீரது திருவுருவம் மிகப்பெரியதென் பதற்கிதுவே சான்ருகும். வேறு பிரமாணம் வேண்டா வென்பார், ஏவ, என்ருர். கடல் குறுமுனியாற் பருகப் பட்டபின் பகீரதனுற் கொண்டுவந்த கங்கைப் பெருக்கான் மீண்டு நிரம்பினவென்பது புராணவரலாறு. அதனுலுலகம் தீவுகளாக்கப்பட்டது. சிவபெருமான் றிருமுடியினுனு வெனக் காணப்பட்டவஃதே, சுவர்க்கமத்திய பாதாளங் களில் விரிந்து பரந்து பெரும் பெருக்கானமையின் அவ்வடி வம் மிக்க பெரியதென வனுமானிக்கத்தக்கதாம். (17)

(அ - கை) முப்புரமெரித்ததை யுணர்த்தித் துதிக்கின் ருர்.

रथः क्षोणी यन्ता शतधृतिरगेन्द्रो धनुरथो
रथाङ्गे चन्द्रार्कौ रथचरणपाणिः शर इति ।
दिधक्षोस्ते कोऽयं त्रिपुरतृणमाडम्बरविधि-
र्विधेयैः क्रीडन्त्यो न खलु परतन्त्राः प्रभुधियः ॥ (१८)

(ப - ரை) [**ईश**=இறைவ], **त्रिपुरतृणम्** = (அசுரருறைவிட மாய) முப்புரங்களுந் துரும்பென்ன (எளிதாக), **दिधक्षोः ते**=

எரிக்க விரும்பிய தேவரீருக்கு, **क्षोणी रथः** = பூமி தேராகவும், **शतधृतिः** = பிரமன், **यन्ता**=(தேரைச்) செலுத்துபவனுகவும், **अग इन्द्रः** = மலைகட்கிறையாகிய மேருமலை, **तनुः**=வில்லாகவும், **चन्द्र अर्कौ**=சோமசூரியர்கள், **रथ अङ्गे**=தேரினிரண்டுருளைகளாகவும், **रथचरण**=தேர்க்காலை [சக்கரத்தை], **पाणिः** =கையிலுடைய திருமால், **शरः** = அம்பாகவும், **इति**=இங்ஙனம் (கொண்ட), **आडम्बरविधिः**=வெளிவேஷவுற்சாகமுறை [பயனின்றிய பெருமுயல்வு], ஆகிய, **अयम्**=இது, **कः** = எதன் பொருட்டு (எனில்), **विधेयैः**=ஏவலாளருடன், **क्रीडन्त्यः**=விளையாடுகின்ற, **प्रभुधियः**=தலைவரது கருத்துகள், **न परतन्त्राः** = வேற்ருேர் வயமாகாதனவாம் (மற்ருேதன்னிஷ்டமேயாம்), **खलु**=(இது) நிச்சயம்.

(வி - ரை) பயன்கருதாது தன் கருத்துப்படிப் பலவகைப் பொருள்களைக் கருவிகளாக்கித் திருவிளையாட்டியற்றுபவரும், தனது நினைவுமாத்திரத்தாற் காரியமனைத்து முற்றுவிக்கு மாற்றலுடையாரும், நான்முறை யுலகமுறை [வைதிக லௌகிகங்] கட்குட் படாதவருமான, பரமர்க்குப் பொருந்தாமை சிறிதுமின்றென நான்காம் பாதத்தாற் கூறினர். (18)

(அ - கை) திருமாலன்பு மதன் பயனுமுணர்த்துவாராய்த் துதிக்கின்ருர்.

हरिस्ते साहस्रं कमलबलिमाधाय पदयो-
र्यदेकोने तस्मिन्निजमुदहरन्नेत्रकमलम् ।
गतो भक्त्युद्रेकः परिणतिमसौ चक्रवपुषा
त्रयाणां रक्षायै त्रिपुरहर जागर्ति जगताम् ॥ (१९)

(ப - ரை) **त्रिपुरहर**=முப்புரமெரித்தோய், **हरिः** = திருமாலானவர், **साहस्रं कमलबलिम्**=ஆயிரந்தாமரை மலர்களாகிய பலியை, [பலி-பூஜாசாமக்கிரி] **ते पदयोः**=தேவரீரது திருவடிகட்கு, **आधाय**=சமர்ப்பிக்கவும், **तस्मिन्**=அம்மலர்களில், **एक ऊने**=ஒன்று (தேவரீரால் மறைக்கப்பட்டுக்) குறைந்தபோது, **निजम्**=(குறை நிரப்புதற்பொருட்டு) தன்னுடைய, **नेत्रकमलम्**=கண்ணுகிய தாமரையை, **उदहरत्**=பறித்தெடுத்து (அருச்சித்தார்) **यत्**=யாதொரு (கண்மலர் அருச்சித்தலாகிய), **असौ भक्ति उद्रेकः** = இவ்வன்பின் முதிர்ச்சியானது, **चक्रवपुषा**= (சுதர்சனமென்னும்) ஆழிவடிவ, **परिणतिम्**=வேற்றுருவை [பரிணமத்தை], **गतः** = அடைந்தவது, **त्रयाणाम् जगताम्**= மூன்றுலகங்களுடைய, **रक्षायै**=காப்பின்பொருட்டு, **जागर्ति**= விழித்துக்கொண்டிருக்கின்றது [சோர்வின்றியிருக்கின்றது.]

(வி - ரை) திருமாலசுரர்களையழித் துலகைப்புரத்தற் பொருட்டுச் சக்கரம்வேண்டி மகாதேவரை நாடொறுமாயிரங்கமல மலர்கொண்டு அருச்சித்தார். மஹாதேவர் ஒருநாண் மலரொன்றை மறைக்கவுந் தனது பூசைநியமத்திற் கூனமுண்டாகாவண்ணந் தனது கண்ணையேபறித்து மலரிலொன்ருக விறைவன்றிருவடியை யருச்சித்தார். அதனுன் மகிழ்வெய்திய பரமேஶ்வரன் ஜலந்தரனைத் தடிந்த சுதரிசனமென்னுஞ் சக்கரத்தை யருள்செய்தார். அதுகொண்டு விஷ்ணுவானவரனைத்துலகுங் காத்தருள்கின்ருராதலின் கருதொண்ணு மகிமையுடையர் மகாதேவர் என்பதாம். (19)

(அ - கை) இங்ஙனஞ் சிவபெருமானை வழிபடுதலானே, அறம்பொருளின்பம் வீடனைத்தும் பெறுதலே, உடன்பா

டெதிர்மறைகளான் மொழிந்தார். தம்மை மீமாம்சகரெனக் கருதியுள்ளார் சிலர், ஈச்சுரனை யுடன்படாததால், செய் தொழிலாதுளதாகு மபூர்வமே நன்மை தீமைகளைப் பயக்கு மென்பர். அவர்களை மறுப்பவராய்த் துதிக்கின்றார்.

क्रतौ सुप्ते जाग्रत्त्वमसि फलयोगे क्रतुमतां
क्व कर्म प्रध्वस्तं फलति पुरुषाराधनमृते ।
अतस्त्वां संप्रेक्ष्य क्रतुषु फलदानप्रतिभुवं
श्रुतौ श्रद्धां बद्ध्वा कृतपरिकरः कर्मसु जनः ॥ (२०)

(ப - ரை) [**त्रिपुरहर**]=முப்புரமெரித்த முதல்வா, **क्रतौ-सुप्ते**=வேள்வித்தொழில் [யாககர்மம்] அழிந்தபோது, **क्रतुमताम्** = வேள்விசெய்வோருக்கு, **फलयोगे** = (வேறுதேசகாலங் களிலடையப்படும்) பயன் பொருந்து நிமித்தம், **त्वं**=தேவரீர் **जाग्रत् असि**=விழிப்புற்றிருக்கின்றீர், **प्रध्वस्तम्**=செய்துமுடிந்த **कर्म**=தொழிலானது, **पुरुष** = சேதனவடிவ ஈச்சுரனின் [பலன் கொடுப்பவரின்], **आराधनंऋते** = வழிபாட்டைத் தவிர்த்து **क्व फलति**=எங்ஙனம் பயன்கொடுக்கும் ; [இல்லை], **अतः**=அத னால், **जनः**=(சுருதிஸ்மிருதிகளில் விதித்த கருமங்கட்கு) அதி காரியானோன், **श्रुतौ**=(துதித்தலிற் கருத்துடையதாய்த் தனது பொருளில் பிரமாணமில்லாத வாக்கியங்களிவை யென்றும், தனது பொருளில் கருத்துடைய பிரமாண வாக்கியங்களிவை யென்று மாராய்ந்து) வேதக்கருத்தின்கண், **श्रद्धां बद्ध्वा** = விசுவாசம் வைத்து, **क्रतुषु**=(பல சாதனங்களாகிய) வேள்வி களில், **फलदान** = பயனைத்தருவதற்கு, **त्वाम्** = தேவரீரை, **प्रतिभुवम्** = குறியாக [ஈடாக], **संप्रेक्ष्य** = நன்றாக வாராய்ந்

தறிந்து (உறுதிசெய்து), **कर्मसु**=தொழில்களில், **कृतपरिकरः**= முயல்கின்றான்.

(வி - ரை) வேள்விக் கிரியைகள் செய்து முடிந்தது மத்தொழில்களழிந்தொழிந்தன வாதலால், செய்துமுடிந்த செயலென்றார். பலன்றரும்வரையிலிருந்து பலனீந்தே யழிகின்றதெனின், வேறிடம் வேறு காலங்களில் குறைதன்மிகுதலாகவும் பலவகையாகவும் பயன்றருதற்கு, இவையனைத்துமுணருஞ் சேதனனன்றி, சடமாகிய வபூர்வத்திற் கெங்ஙனம் வலியுடமை கூடும். உலகிலரசர் முதலிய சேதன வடிவினரே தொழிற்பயன் றரக்கண்டாம். மற்றுஞ் சாஸ்திரங்கள், ஈச்சுரனுக்குச் சாதனமாக வபூர்வத்தை யுடன்பட்டிருக்கின்றன, உண்மையி லபூர்வத்திற்குப் பிரமாணமின்றாகலினீச்சுரனின்றி யெங்ஙனம் பலன்றருமென்றார். வியவகாரவன்மை பெற்றோனாகிய கடன் கொடுப்போனொருவன் பிரமாணத்தாலுறுதி செய்யப்பட்டது மளவில்கால மிருப்பதும், தனது பொருளைக் கொடுக்கக் கூடியதுமான நிலமொன்றை யீடாகக்கொண்டு, கடனாளி யோடினு மல்லதிறப்பினுமந்த பூமியாதியினின்றுந் தனத்தை யடைவேனென்னுங் கருத்தா லொருவனுக்குக் கடன் கொடுக்கின்றான். அதுபோல் கடனாளியன்ன கருமமழியினும் ஈடுசெய்த நிலத்தை யொத்த வீச்சுரனிடத்தில் பயனடைவேனென்னுங் கருத்தால், கடன் றருவோனொத்த வதிகாரிகள் சங்கையின்றிக் கருமங்களைச் செய்கின்றார்களென்பதைப் பிற்பாதி சுலோகத்தாற் கூறினர். (20)

(அ - கை) இங்ஙன மிறையருளானே யாகபலனைக் கூறி யவ்விறையருளின்றேல் பிரத்தியட்சமாகத் துன்பப் பயனினடைவை யுணர்த்துபவராய்த் துதிக்கின்றார்.

क्रियादक्षो दक्षः क्रतुपतिरधीशस्तनुभृता-
मृषीणामार्त्विज्यं शरणद सदस्याः सुरगणाः ।
क्रतुभ्रेषस्त्वत्तः क्रतुफलविधानव्यसनिनो
ध्रुवं कर्तुः श्रद्धाविधुरमभिचाराय हि मखाः ॥ (२१)

(ப - ரை) **शरणद** = அபயமருள்வோய், **क्रियादक्षः** = வேள்வி முதலிய தொழில் புரிவதில் சமர்த்தனும், **तनुभृताम्**= உடம்போடுகூடிய உயிர்கட்கு, **अधीशः** = தலைவனு [பிரஜாபதியு] மாகிய, **दक्षः** = தக்கனென்போன், **क्रतुपतिः** = யாகத்திற் கெஜமானனுகவும், **ऋषीणाम्** = (முக்காலமுமுணரும் பிருகு முதலிய) முனிவர்கட்கே, **आर्त्विज्यम्** = யாகஞ்செய்யுந் தன்மையும் [இருத்விக்கின் வேலையும்], **सुरगणाः** = பிரம்மா முதலான உம்பர் குழாங்களே, **सदस्याः** = சபையினராகவும் [ஆக விங்ஙனஞ் சிறப்புற்ற], **क्रतुफल**=வேள்வியின் பயனுஞ் சுவர்க்க முதலானவற்றை, **विधान**=தருவதில், **व्यसनिनः** = சிந்தையுடைய, **त्वत्तः** = தேவரீரால், **क्रतु**=(அவ்) வேள்வியானது, **भ्रेषः** = நழுவுற்றது [அழிந்தது], **श्रद्धाविधुरम्**= (தேவரீர்பால்) அன்பின்றிச் செய்யப்படும், **मखाः** = யாகங்கள், **कर्तुः** = யாகஞ் செய்பவனுக்கு, **ध्रुवम्** = உறுதியாக, **अभिचाराय हि**=தனது கேட்டின்பொருட்டே யாகின்றன.

(வி - ரை) தக்கனுற் ருெடங்கிய வேள்வியானது துணைக் கருவிகளனைத்துடனு நன்கு பொருந்தியிருந்தும், வேள்விப்பயன்றருபவர் தேவரீராயிருந்தும், உம்மை யிகழ்ந் தன்பின்றிச் செய்யப்பட்டதா லவ்வேள்வி சிதறுண்டழிவுற் றுப் பயனுமின்ருயது. இதனையே வலியுறுத்துவான் வேண்

டிப், பரசிவத்திடத்துப் பத்தியின்றி வேள்வி செய்யுந் தலை வற்குக் கேடுசூழ்வதொருதலையே யென்று கூறினர். (21)

(அ - கை) தமதாணை யிகழ்ந்த பிரம்மனைத் தண்டித்த லைக் கூறுபவராய்த் துதிக்கின்றார்.

प्रजानाथं नाथ प्रसभमभिकं स्वां दुहितरं
गतं रोहिद्भूतां रिरमयिषुमृष्यस्य वपुषा ।
धनुः पाणेर्यातं दिवमपि सपत्राकृतममुं
त्रसन्तं तेऽद्यापि त्यजति न मृगव्याधरभसः ॥ (२२)

(ப - ரை) **नाथ** = ஆணைசெலுத்துமைய, **रोहिद्भूताम्** = (நாணத்தால்) பெண்மான் வடிவடைந்த, **स्वाम्** = தனது, **दुहितरम्** = மகளை, **प्रसभम्** = பலாத்காரமாக, **रिरमयिषुम्** = [இரமிக்கும்] இன்புறும் விருப்புடையனும், **अभिकम्** = காமுகனும், **ऋष्यस्यवपुषा**=தானு மாண்மான் வடிவுகொண்டு, **गतम्** = (அவளை) தொடர்ந்து சென்றவனும், **दिवम् अपि**= (அச்சத்தால்) உம்பருலகத்தும், **यातम्** = சேர்ந்தவனும், **सपत्र आकृतम्** = தொடர்ந்துவரும் பாணத்தோடுகூடியவனு மாய, **अमुम्** = இந்த, **प्रजानाथम्** = பிரம்மாவை, **धनुः पाणेः** = (பிநாகமென்னும்) வில்லைக் கையிலுடைய, **ते**=தேவரீருடைய, **मृगव्याधरभसः** = மிருக வேட்டையாடும் வேடுவன்போன்ற வேட்டையுற்சாகமானது, **त्रसन्तम्** = அச்சுறுத்தலை, **अद्या अपि**=இன்றுவரையும், **न त्यजति**=விடுவதில்லை.

(வி - ரை) பிரம்மாவானவர் மிக்க வழகுவாய்ந்த திலோத்தமையென்னு மொருமங்கையைச் சிருட்டித் தன் னுளை யணைவான் காமுற்றார். தந்தையெனக்கருதி யவள்

மறுத்தாள். வலிந்து பற்ற முயன்றார். நாணுற்றுப் பெண் மான் வடிவுகொண்டோடிய வவளை யயனுமான்வடிவுற்றுப் பின்றொடர்ந்தே யோடினன். அனைத்துலகுமுறைப்படுத்து மகாதேவ ரிதனைக்கண்டு, இவனுலகிலுள வுயிரனைத்தையுந் தருமவழியிற் செலுத்துபவனு யிருந்து மிங்ஙனம் வெறுக்கத் தக்க செயலைச் செய்கின்றான், பெருந்தீங்காதலின், நம்மால் தடியத்தக்கானிவனென்று வில்லிற்சரந்தொட்டுவிட்டார். அச் சரத்தாலயன் துன்புற்றஞ்சி மிருகசிர நட்சத்திர வடிவை யடைந்தான். அதன்பின், இறைவனது பாணமு நட்சத்திர வடிவுற்றுப் பின்றொடர்கின்றது. அதனால் மிருகசிரவாருத் திரா நட்சத்திரங்கட்கின்று மியைபுண்மையின், என்றும் விடு வதில்லையென்பது புராணவாக்கியம். (22)

(அ - கை) சாம்பமூர்த்தி புலன்வென்ற மேலோர்க்குந் தலைவராயினும் பார்வதிபாற் கொண்டவருளால் விடரைப் போற் காணப்படுகின்றாரெனக் கூறுபவராய்த் துதிக்கின்றார்.

स्वलावण्याशंसाधृतधनुषमह्नाय तृणवत्
पुरः प्लुष्टं दृष्ट्वा पुरमथन पुष्पायुधमपि ।
यदि स्त्रैणं देवी यमनिरत देहार्धघटना-
दवैति त्वामद्धा बत वरद मुग्धा युवतयः ॥ (२३)

(ப - ரை) **पुरमथन** = அசுரர் புரமெரித்தவண்ணலே, **यमनिरत** = இயமாதி யோகத்தினிலைத்தவ [மேலான யோகியே], **वरद** = உயர்வளிக்கும் வள்ளலே, **स्व लावण्या** = தனது [பார்வதியின்] கட்டழகை, **आशंसा** = நம்பிக்கொண்டு, **धृतधनुषम्** = (மீண்டும்) கையிற்பற்றிய வில்லுடையவனுகிய,

पुष्पायुधम् = பூங்கணையானை, **पुरः** = (அம்மலைமகளின்) கண்ணெதிரே, **तृणवत्** = துரும்புபோன்று, **अह्नाय** = விரைவில், **प्लुष्टम्**=எரித்ததை, **दृष्ट्वा अपि**=கண்டும், **देहार्धघटनात्**=(கருணையால் தேவரீரது) பாதியுடம்பில் தேவியையியைத்தல் காரணமாய், **देवी**=உமாதேவியார், **त्वाम्**=தேவரீரை, **स्त्रैणम्**=பெண் விருப்புடையாரென்று, **अवैति यदि** = நினைவுகொள்வாராயின், **अद्धा** = (அது) தகுதியேயாம் (என்னெனின்), **बत** = அகோ, **युवतयः** = தருணமங்கையர், **मुग्धा** = இயல்பாகவே மடமையுடையோர்.

(வி - ரை) உமாதேவியார் பிரிந்து மலையரசன் பாலவதரித்து வளர்ந்து வருங்கால், இறைவன் றனதுகண்களை மூடி மௌனியாய் யோகத்திருந்தனர். தேவர்களேவலான் வந்த மன்மதன், முக்கண்ணரின் நிலையை யறிந்து நடுங்கி நழுவிய வில்லுடன் வீழ்ந்து மயங்குங்கால், தேவியாரங்கு வருதல்கண் டெழுந் துரம்பெற்றுநின்று, தேவியாரின் சௌந்தரியத்தை நிமித்தமாகக்கொண் டிழுந்தவில்லையேந்தி மலரம்பை விடுத்ததும், முக்கண்மூர்த்தி நுதற்கண் விழித்ததும், மதனன் சாம்பரானது மொருநொடிப் போதேயாம். இதுகண்ட தேவியார், நமது சுந்தரமு மகாதேவரிடத் தற்பமானதென வெட்கி மீண்டபின், தேவியார் தவத்தானன்றிப் பரசிவனருள் பெறற்கு நெறியின்றென வுணர்ந்து செயற்கருந்தவ மியற்றினர். தேவி வருந்தற்கவென விறைவன் கருணைகொண்டு, தமது திருவுருவிற் பாதியைத் தந்தருளி தேவியோடோருருவாயினர். கௌரி யொருகால் தம்மைப் பாதியுடலிலமைத்ததைக் கொண்டுத் தம்வச மாயினரென்று மயக்குற்றுக் காமாரியைக் காமுகராய்க் கருதின் தருண மங்கையர்க்குத்

தம்முடன் பிறந்த குண பூஷணங்களுண் மடமையுமொன்று மாதலின், தேவியார் ஞானவடிவினராயினு மவர்க்கிம் மித்தியாஞானம் பொருத்தமே யென்றதாம். (23)

(அ - கை) சிவபெருமான் அமங்கள சீலராய்த் திருவிளையாட்டியற்றினும் பத்தர்கட்கு மங்கள வடிவராய் மங்களத்தையே கொடுக்கின்றாரெனக் கூறித் துதிக்கின்றார்.

स्मशानेष्वाक्रीडा स्मरहर पिशाचाः सहचरा-
श्चिताभस्मालेपः स्रगपि नृकरोटीपरिकरः ।
अमङ्गल्यं शीलं तव भवतु नामैवमखिलं
तथापि स्मर्तॄणां वरद परमं मङ्गलमसि ॥ (२४)

(ப - ரை) **स्मरहर** = மதனையழித்தோய், **वरद** = வள்ளன்மையுடையோய், **स्मशानेषु** = மயானங்களில், **आक्रीडा** = விளையாடுதலும், **पिशाचाः** = பேய்க்கணங்கள், **सहचराः** = தோழர்களும், **चिताभस्म** = பிணங்களைக் கொளுத்திய வெண்ணீறே, **आलेपः** = உடற்பூச்சும், **नृकरोटीपरिकरः** = மனிதரின் [ஜீவர்களின்] வெண்டலைகளின் சேர்க்கை, **स्रज् अपि**=மாலையும் (ஆக), **एवं** = இவ்வண்ணம், **तव** = தேவரீருடைய, **अखिलं शीलम्** = எல்லாவொழுக்கமும், **अमङ्गल्यम्** = நலனற்றதாக, **भवतु नाम**=உளதாகுக, **तथापि**=அங்ஙனமாயினும், **स्मर्तॄणाम्**= (தேவரீரைத்) தியானஞ்செய்யும் பத்தர்கட்கு, **परमम्** = உத்தமமான, **मङ्गलमसि** = கல்யாணவடிவமாயிருக்கின்றீர்.

(வி - ரை) **अपि** என்றதால் ஈரமாகிய தோலாடை முதலானவையுங் கொள்க. மகாதேவர் மங்களமற்ற வொழுக்க

முடையராயினும், அன்பர்கட்குயர்வான மங்களவடிவரென்ற தால், அமங்கள வடிவராய சிவபெருமான், மங்களம் விரும்புவோரால், வழிபடற்குரியரன்றென்னு மயக்கொழித்து மன மொழி மெய்களான் யாவரும் வணங்குதற்குரியரென வுணர்த்தினர். (24)

(அ - கை) இதுகாறுஞ் சகுணவடிவ வீச்சுரனையு மவ் வீச்சுரன் றனதனந்த மூர்த்தத் திருவிளையாடல்களையும் விளம்பி, இனி வேத முதலியவனைத்தி னுண்மைக் கருத்திற்கு விஷயமாயுள்ள அத்விதீயப்பிரமத்தை மேற்செய்யுட்களாற் கூறுகின்ருர். முன் மங்கள வடிவமாயிருக்கின்றீரென்றதில், மங்களமெனற்பாலது சுகமாகும், ஈச்சுரன் சுகவடிவரன்று, சுகத்தினிலைக்களனுமன்று, மற்ருே நித்திய ஞானதி வடிவர்; எனத்தார்க்கிகரும், கிலேசகர்மாதியற்ற புருஷவிசேஷ ரீச்சுரர் சுகவடிவரன்றெனப் பாதஞ்சலருங் கூறுங்கூற்றை மறுப்பான்வேண்டி, அறிஞரினநுபவ வடிவப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் பரமேச்சுரன் அத்விதீய பரமானந்த வடிவ ரெனக் கூறுபவராய்த் துதிக்கின்ருர்.

मनः प्रत्यक्चित्ते सविधमवधायात्तमरुतः
प्रहृष्यद्रोमाणः प्रमदसलिलोत्सङ्गितदृशः ।
यदालोक्याह्लादं ह्रद इव निमज्ज्यामृतमये
दधत्यन्तस्तत्त्वं किमपि यमिनस्तत्किल भवान् ॥ (२५)

(ப - ரை) **वरद** = வள்ளன்மையுடையோய், **यमिनः** = யோகிகள், **प्रत्यक् मनः** = உண்முகமாகிய மனதை, **चित्ते** = இருதய தாமரையில், **अवधाय** = (விருத்திகளின்றி) நிறுத்தி,

सविधम् = இயமாதி சாதனப் பிரகாரங்களோடும், **आत्तमरुतः**= உட்டரிக்கப்பட்ட (கும்பித்த) பிராணவாயுவை யுடைய வர்களாய், **यत् किमपि तत्वम्** = எந்த இத்தன்மையதென்று சொல்லற் கரிய யாதோ வொரு பொருளை, **अन्तः** = உள்ளில், **आलोक्य** = அபரோட்சமாய்த் தரிசித்து, **प्रहृष्यद्रोमाणः** = மிகவும் புளகிதராய் [மயிர்ச் சிலிர்ப்புடையராய்], **प्रमद शलिल** = ஆனந்தக் கண்ணீர், **उत्सङ्गितदृशः** = சொரியுங் கண்ணராய், **अमृतमये** = அமுதம் நிரம்பிய, **हृदे** = ஆழ்ந்த தடாகத்தில், **निमज्य इव** = மூழ்கினவரைப் போன்று, **आह्लादम्** = பரமானந்தத்தை, **दधति** = அடைகின்றனரோ, **तत् (तत्वम्)** = அப்பொருள், **किल** = (சத்திய ஞானனந்த வடிவமாக வேதங்களில்) பிரசித்தமான, **भवान्** = தேவரீரே யாகும்.

(வி - ரை) **मनः+मरुतः** என்றதால், பதஞ்சலி பகவானுற் கூறிய வஷ்டாங்க யோகத்தின் பரிபாகமான நிதித்யாசனம் பிரம்மசாக்ஷாத் காரத்திற் கேதுவாகச் சொல்லப் பட்டது. வேதாந்த வாக்கியத்தினுற் ருேன்றிய அகண்டா கார விருத்தியால் சத்திய ஞானனந்த நிற்குண சிவ வடிவத்தைச் சாக்ஷாத் கரித்தலே **किमपि तत्वम्** என்ருர். புளகிதமுங் கண்ணீரும் யோகியினனந்தானுபவத்திற் கனுமான லிலிங்கங்களாம் பிரம்மானந்தத்திற் குதாரண மொன்று மில்லை யெனினும், உலகோரது புத்திதிடத்தின் பொருட் டுச் சிறிதொப்புமை கருதி யமுதமய தடாகமென்ருர். இவ் வானந்தம் வேதங்களில் வெளிப்படையாய தேவரீரே யல்லாது, தார்க்கிகர் முதலானோர் கூறும் பிரகார மன்றென்பார் **तत् किल भवान्** என்ருர். இவ்வாகாய மானந்தவடிவ

மாகாவிடி னெவன்றன் மற்றென்று லுயிர்வாழ்வான், என் பது முதலிய சுருதிகளும் இப்பொருளிற் பிரமாணங்களாம். ஆதலின் பரசிவம் பரம மங்களவடிவராகாமை யெங்ஙன மென்பதெஞ்சி நின்றது. (25)

(அ - கை) பரமேச்சுர னத்விதீய பரமானந்த வடிவ மெனக் காட்சிப் பிரமாணங் கூறியதற்குத் தருக்கத்தானு மெய்ப்பிக்கின்றார்.

त्वमर्कस्त्वं सोमस्त्वमसि पवनस्त्वं हुतवह-
स्त्वमापस्त्वं व्योम त्वमु धरणिरात्मा त्वमिति च ।
परिच्छिन्नामेवं त्वयि परिणता बिभ्रतु गिरं
न विद्मस्तत्तत्त्वं वयमिह तु यत्त्वं न भवसि ॥ (२६)

(ப - ரை) [वरद = வள்ளலே], अर्कः त्वम् = சூரிய னும் நீரே, सोमः त्वम् = சந்திரனும் நீரே, पवनः त्वम् = காற்றும் நீரே, हुतवहः त्वम् = அனலும் நீரே, आपः त्वम् = புனலும் நீரே, व्योम त्वम् = விண்ணும் நீரே, धरणिः त्वम् = நிலனும் நீரே, आत्मा त्वम् = உயிரும் நீரே, इति एवम् = என்றிவ்வகை, परिच्छिन्नाम् = அளவு படுத்தப் பட்டதாக [பரிச்சின்னமாக], त्वयि = தேவரீர் விஷயத்தில், परिणताः = பரிபக்குவ முடையோர், गिरं बिभ्रतु = சொல் வழங்குக (தரிக்குக) वयंतु = யாங்களோ, यत् = எப்பொருளின் வடி வம், त्वं न भवसि = தேவரீரன்றோ, तत् तत्वम् = அத்தகையப் பொருளை, न विद्मः = அறிகிலேம்.

(வி - ரை) உ காரத்திற்குத் தேற்றப் பொருளில் त्वं பதத்தோடு சேரும், சகாரத்திற்கு எண்ணும்மைப் பொருளாம். இவ்வெட்டும் ஸ்ரீ உருத்திர மூர்த்தியாக வாகமம் வெளியிட்டதாய் மேற்கூறும் பவமுதலிய பெயர்களெட்டோடு நான்காம் வேற்றுமையுடன் நம வென்பதை யீற்றிற் கொண்ட வெட்டு மந்திரங்களாம். இவை ஆசிரியர் முன்னிலேயி லறிதற்குரியனவாம். பரிபக்குவமல்லாரை, बिभ्रतु என்ற வியங்கோள்வினே உடன்பாடின்மையி லுடன்பாட்டைக் காட்டலின், பரிபக்குவ முடையோரென்றது பரிகாசமாம். அற்றேல் உடன்பாடென்னெனின், (नविघ्नः+भवसि) என்றதாம், சத்திற்கு வேறுக ஒன்று மறியப்படுவதின்றென்றதால், தருக்கத்தானு மத்வைதம் பெறப்பட்டது. அனைத்தும் பிரம்மமாயின் கடமுதலாய ஞானம் பிரம்ம ஞானமாவதுடன் கடமுதலியன சத்வடிவத்தால் விழி முதலியவற்றிற்கு விஷயமாதலால் சத்தாகிய பிரம்மம் வேதாந்த வாக்கிய மாத்திரத்திற்கு விஷய மென்றது வியாகாதமெனில்; கடாதி ஞானத்திற் கவித்தையாற் கற்பிக்கப்பட்ட வன்னிய சம்பந்தமுற்ற சைதன்னியம் விஷயமாதலால், அன்னியத்தின் சம்பந்த மின்றிய சைதன்னிய ஞானம் பிரம்மஞான மாவதுடன், அன்னிய சம்பந்த மின்றிய சைதன்னியமே வேதாந்த விஷயமாதலால் வியாகாதமன்று. சத்தின் வடிவான பிரத்தியக்ஷப்பிரமாணமும், திரவியமிருக்கின்றது குணமிருக்கின்றதென்பது முதலிய பேதவியவகாரமும், சர்வபேதங்களிலுந் தொடர்ந்திருக்குஞ் ஜாதிவடிவவொரு வத்துவை மாத்திரம் பற்றியது. பேத வியவகாரமாதலின்; இருமதிப்பேத வியவகாரம்போல் - என்பதால்,

அபேத வியவகாரத்தன்மை யிலிங்கமும், சருவாத்மத்தன்மை யைக் கூறுதல் வேறுவழியாகப் பொருந்தாமையால் வேதமு மாகிய மூன்று பிரமாணங்கள் மொழியப்பட்டன. விரிவான தருக்கம் கல்பலதிகையிற் காணத்தக்கது. ஆதலான் அத்விதீயத்வம் பொருத்தமென்றதாம். (26)

(அ - கை) இனி அத்விதீயத் தன்மையை யாகமத்தாலு நிச்சயிக்கின்றார். அல்லது முன்னிரண்டு சுலோகங்களான் முறையே த்வம்பததத்பதப்பொருள்களை யாராய்ந்து, இதில் அகண்ட வாக்கியப்பொருளைக் கூறுபவராய்த்துதிக்கின்றார்.

त्रयीं तिस्रो वृत्तीस्त्रिभुवनमथो त्रीनपि सुरा-
नकाराद्यैर्वर्णैस्त्रिभिरभिदधत्तीर्णविकृति ।
तुरीयं ते धाम ध्वनिभिरवरुन्धानमणुभिः
समस्तं व्यस्तं त्वां शरणद गृणात्योमिति पदम् ॥(२७)

(ப - ரை) **शरणद**=அடைந்தோர்க் கபயமருளுமரனே, **व्यस्तम्**=வேறுவேறாக வவயவ சக்தியுடைய, **ओं इति पदम्**= ஓங்காரமாகிய பிரணவமொழியானது, **अकाराद्यैः** = அகார முதலிய, **वर्णैः त्रिभिः** = மூன்றெழுத்துக்களால், **त्रयीम्** = மூன்றுவேதங்களையும், **तिस्रः वृत्तीः** = மூன்றவத்தைகளையும், **त्रिभुवनम्**=மூவுலகங்களையும், **त्रीन् सुरान्**=மும்மூர்த்திகளையும், **अभिदधत्** = (சக்திவிருத்தியால்) தழுவி [போதித்து]க் கொண்டு, **व्यस्तम्**=வெவ்வேறாக, **त्वाम्**=தேவரீரையே, **गृणाति**=கூறுகின்றது, (அங்ஙனமே), **समस्तम्**=சமுதாயசக்தியுடைய, (**ॐ इति पदम्**)=ஓமென்னு மொழியானது, **तीर्णविकृति**

= விகாரமாகிய காரியங்கடந்த, **तुरीयम्** = (மூன்றவத்தைகளி னபிமானிக்குவேருகிய) துரீயமென்னும், **ते**=தேவரீரது, **धाम**=பரிபூரணப்பிரகாச வடிவத்தை, **अवरुन्धानम्**=வெளிப் படையின்றிய, **अणुभिः ध्वनिभिः** = அணுக்களாகிய சூக்கும சத்த அர்த்தமாத்திரையால், [**समस्तम्**] **त्वाम्**=சர்வாத்மக மாகிய தேவரீரையே, **गृणाति**=மொழிகின்றது.

(வி - ரை) அகார உகார மகாரமென்னு மூன்றம்ச மாகிய வோங்காரம் பண்புத்தொகையால் சமுதாய [பொது] சத்தியுடையதாகியபதமாம். ராகுவினது சிரம் என்பது போல் **तेधाम** என்பதுபசாரமாம். அர்த்தமாத்திரையொன் ருயினும் அளபெடையா யொலிக்கும்போது நீண்ட நேரந் தொடருமதற்கு, அணு வணுதர மணுதம மாதியாக வனேக சூக்கும சத்தரூபங்களிருத்தலால் **ध्वनिभिः** எனப் பன்மை யாகக் கூறினர்.

அகாராதியால் வியஸ்தமாகிய வோமென்னும் பதம் வெவ் வேருய்த் தேவரீரையே கூறும் எனக்கூட்டுக. அவத்தை களைக் கூறியதால் விசுவனுதியும், உலக மென்றதால் விராட் டாதியும், மூர்த்தியென்றதால் சிருட்டியாதியும், உப லக்ஷணத்தால் கொள்ளத்தக்கனவாம். ஆகவே, இருக்கு ஜாக் கிரம் பூ முதலிய கீழ்லோகம் பிரம்மாவென்னு நான்கும், அகாரப்பொருள். யஜுர், சொப்பனம், புவர் முதலிய மத் தியலோகம், விஷ்ணுவென்னு நான்கும், உகாரப்பொருள். சாமம், சுழுத்தி, சுவர்க்காதி மேலுலகம், மகேச்சுரனென்னு நான்கும், மகாரப்பொருள். இதனுல் தூல சூக்கும காரணப் பிரபஞ்சங்களினுபகித சைதன்னியங்கண் முறையே அகார,

உகார, மகாரங்களின் வாச்சியப்பொருளாம். இவைகளிற் றால சூக்கும மாயைகளாகிய வம்சங்களைக் கைவிட்ட சைதன் னியமாத்திரம், அகாராதிகளி னிலக்ஷியப்பொருளாம். துரீ யத்தன்மை,சருவத்தினு முள்ளாயிருக்குந்தன்மை யாதியாலு பகித சைதன்னியம் அர்த்தமாத்திரையின் பொருளாம். உபாதிகைவிட்ட சைதன்னிய மாத்திரமதனிலட்சியமாம். அகார உகார மகார வர்த்தமாத்திரையாகிய விந்நான்கின் சாமானாதிகரண்ணியத்தால் (ஒரு பொருளையே குறித்தலால்) அபேதஞான முண்டாகும்போது சருவ துவைதங்களு மொடுங்கலால் பரிபூரணவத்விதீய சைதன்னியமாத்திரம் பெறப்படுகின்றது. இலக்ஷணையால் கைவிட்டமாயையு மதன் காரியங்களும் பொய்ம்மையாலும், அதிட்டான ஞானத்தின் பினத்தியாசப்பொருள் பெறப்படாததாலும் வேறாக விருக் கின்றன வென்னும் வார்த்தையுமின்றாம். வேதவாக்கியங்கள் வாக்கியார்த்த போதத்திற்குபயோகமாகாவிடினும், உபா சனையின்பொருட் டுபயோகமாகத் தனித்துக் கூறுவதாகக் கொள்ளவேண்டும். ஆதலின் துவைதமின்றிய பிரம்மம் பிரணவப் பொருளாம். (27)

(அ - கை) இங்ஙனம் பிரம்மவாசகமான பிரணவத்தி னர்த்தசிந்தனமுஞ் ஜபமும் புருஷார்த்தமனைத்தின் சாதன மாகச் சுருதி சூத்திரங்களிற் சொல்லப்பட்டிருப்பினும், இது மிகவுமறிதற்கரியதாதலின், சிலர்க்கே கூடும். மற்றைய வதி காரிகட்குச் ஜபத்தின்பொருட்டுப் பரமசிவநாமங்களைக் கூறு பவராய்த் துதிக்கின்றார்.

भवः शर्वो रुद्रः पशुपतिरथोग्रः सहमहां-
स्तथा भीमेशानाविति यदभिधानाष्टकमिदम् ।

अमुष्मिन्प्रत्येकं प्रविचरति देव श्रुतिरपि
प्रियायास्मै धाम्ने प्रविहितनमस्योऽस्मि भवते (२८)

(ப - ரை) देव = பரமேஸ்வர, भवः शर्वः रुद्रः पशुपतिः उग्रः = பவன், சருவன், உருத்திரன், பசுபதி, உக்கிரன், सहमहान्=மஹாதேவன் [மஹத்பதத்தோடுகூடியது], भीमः ईशानः = பீமன், ஈசானன், इति=என்று துதிக்கப்பட்ட, यत् इतम्=(தேவரீரது) எவ்விந்த, अभिधानाष्टकम्=நாமங்களெட்டாமோ, अमुष्मिन्=இவைகளில், श्रुतिः अपि=வேதமும், प्रत्येकम्=ஒவ்வொரு நாமத்தையும், प्रविचरति=யாண்டு மேற்றமாய்ப் புகழ்கின்றது, अस्मै=இத்தகைய மேன்மையராயும், प्रियाय=எனது அன்பிற்கு விஷயராயும், धाम्ने=சோதிவடிவராயுமாகிய, भवते=தேவரீருக்கு, प्रविहित नमस्यः अस्मि= மனமொழி மெய்களால் செய்யத்தக்க வணக்கத்திற்குரியனுயிருக்கின்றேன் [நமஸ்கரிக்கின்றேன்].

(வி - ரை) अपि யென்றமையான் புராணுகம முதலியனவுங் கொள்ளத்தக்கன. எவரது நாமமாத்திரம் புருஷார்த்தமனைத்தையுந் தருமோ வவரெத்தகைய மேன்மையரோவென்னு மன்பின்பொலிவால் யாதொன்றையு மியற்றுஞ் சத்தியிலனுயினும் வணக்கமட்டிலுஞ் செய்கின்றேனென்றுர். எட்டாக மொழிந்த இந்நாமங்களொவ்வொன்றிலும் देव என்னுமொழியுஞ் சம்பந்திக்கின்றதெனப் பொருள்கொண்டு, भवदेव, என்றன் முதலியன தேவரீருடைய நாமாஷ்டகமெனக் கொள்ளலுமாம். (28)

(அ - கை) வணக்கமே புரிவாராய்க் கருதவொண்ணு மகிமையாகத் துதிக்கின்றுர்.

नमो नेदिष्ठाय प्रियदव दविष्ठाय च नमो
नमः क्षोदिष्ठाय स्मरहर महिष्ठाय च नमः ।
नमो वर्षिष्ठाय त्रिनयन यविष्ठाय च नमो
नमः सर्वस्मै ते तदिदमिति सर्वाय च नमः (२९)

(ப - ரை) **प्रियदव** = எவரும் சஞ்சரியாவனத்தில் [விஜேதமாய்] சஞ்சார விருப்புடையோய், **नेदिष्ठाय नम:** = மிகுந்த சமீபத்திருக்குந் தேவரீருக்கு வணக்கம், **दविष्ठाय च नम:** = அதிக தூரத்திலுமிருக்குந் தேவரீருக்கு வணக்கம், **स्मरहर** = காமதகன, **क्षोदिष्ठाय नम:** = நனிசிறியராய தேவரீருக்கு வணக்கம், **महिष्ठाय च नम:** = கழிபெரியராய தேவரீருக்கு வணக்கம், **त्रिनयन** = முக்கண்ணு, **वर्षिष्ठाय नमः** = முதியரினு முதியராய தேவரீருக்கு வணக்கம், **यविष्ठाय च नम:** = யாவரினும் யௌவனராய தேவரீருக்கு வணக்கம், **सर्वस्मैते नमः** = அனைத்துருவாந் தேவரீருக்கு வணக்கம், **तत् इति** = அது [பரோக்ஷம்] என்றும், **इदम् (इति)** = இது [அபரோக்ஷம்] என்றுஞ் சொல்லொண்ணுத, **सर्वाय च नमः** = அனைத்தினதிஷ்டானமாகிய தேவரீருக்கு வணக்கம்.

(வி - ரை) **नेदिष्ठाय** முதலிய மொழிகண் முறையே **अन्तिकम्** (=சமீபம்), **दूरम्**, **क्षुद्रम्** (=சிறியது), **महत्** (=பெரிய) **वृद्ध** (=வயதுமுதிர்ந்த), **युवन्** (=வாலிபன்), என்ற பதங்களினின்றும் வந்ததா யதிகமிகுதியை [இதற்குமேலொன்று மின்றி யிதுவே முடிந்த வெல்லை யென்பதை]க் காட்டுவனவாம்.

இங்ஙன முற்றுமாறுபட்ட வியல்பினராகிய மகேச்சுர னது சொரூப நிச்சயஞ் செய்தல், குறுகிய மதியினர்க் கெவ்வாற்றானுமரியதாதலின், அவரையென்றும் போற்றலே செயற்பாலதென வுணர்த்துவான்வேண்டி, **नमः** சப்தங்களை யடுத்தடுத்து வகுத்தனர். அனைத்துருவாயின் காரியத்துட னபேதத்தன்மையா னழியுமன்றோ வென்னுஞ் சங்கையகல, முற்றும் பொய்ம்மையே யாதலின் வேற்றுமையின்றி யெவற்றி னுக்கு மதிட்டானமாகிய தேவரீருக்கு வணக்க மெனக் கூறி முடித்தார். **शर्वाय** என்றும் பாடம். (29)

(அ - கை) கூறிய பொருள் யாவையுஞ் சுருக்கி யுரைப் பவராய்த் துதிக்கின்றார்.

बहलरजसे विश्वोत्पत्तौ भवाय नमोनमः
प्रबलतमसे तत्संहारे हराय नमोनमः ।
जनसुखकृते सत्वोद्रिक्तौ मृडाय नमोनमः
प्रमहसिपदे निस्त्रैगुण्ये शिवाय नमोनमः ॥ (३०)

(ப - ரை) **विश्व उत्पत्तौ**=உலகனைத்து முண்டாக்கு நிமித் தம் **बहलरजसे** = (சத்துவதமோகுணங்களிரண்டினும்) மிக்க இரஜோகுணராய, **भवाय** = பிரம்மாவாகிய தேவரீருக்கு, **नमः नमः** = வணக்கம் வணக்கம், **तत्संहारे** = அவ்வுலகங்களையொடுக் கும்பொருட்டு, **प्रबलतमसे** = (மற்றைய குணங்களினு) மிக்க தமோகுணவுபாதியுடையராய, **हराय नमः नमः** = உருத் திரமூர்த்தியாய தேவரீருக்கு வணக்கம் வணக்கம், **सत्व उद्रिक्तौ** = (மற்றிரண்டினு முதன்மையாக) விருத்தியான சத் துவகுண மிக்கவராய், **जनसुखकृते** = ஜீவர்கட் கின்பகாரண

மாங் காத்தல் புரியும் பொருட்டு, **मृडाय नमः नमः** = திருமால் வடிவாகிய தேவரீருக்கு வணக்கம் வணக்கம், **निस्त्रैगुण्ये** = சத்துவாதிமுக்குணங்களைக் கடந்த, **प्रमहसि पदे** = சருவ வுத்தமசோதிவடிவாகிய மோக்ஷ நிமித்தம், **शिवाय नमः नमः**= மங்களமாஞ் சிவவடிவருமாகிய தேவரீருக்கு வணக்கம் வணக்கம்.

(வி - ரை) இவரினின்று முலகமுண்டாதலால் **भवाय,** என்றும், அழிப்பவராதலால், **हराय,** என்றும், சுகமளிப்பவராதலால், **मृडाय,** என்றும் பரமானந்த வடிவராதலின் **शिवाय** என்றுங் கூறினர். (30)

(அ - கை) மூன்றுஞ் சுலோகத்திற்றன தடக்கமின்மையின் பரிகாரமாகத் தொடங்கியதை முடித்துரைக்கின்றார்.

कृशपरिणति चेतः क्लेशवश्यं क चेदं
क च तव गुणसीमोल्लङ्घिनी शश्वदृद्धिः ।
इति चकितममन्दीकृत्य मां भक्तिराधा-
द्वरद चरणयोस्ते वाक्यपुष्पोपहारम् ॥ (३१)

(ப - ரை) **वरद**=வேண்டுவவருளும் வள்ளால், **कृशपरिणति** = அற்பபரிபாகமானதும், **क्लेशवश्यम्** = துயர்கட்கிடமாயதுமான (சிற்றறிவுடைய), **इदं चेतः क**=இந்த வெனது மனமெவ்வளவு தூரத்தது, **तव** = தேவரீரது, **सीमा उल्लङ्घिनी** = எல்லையைக்கடந்த, **गुण**=கலியாண குணமாகிய, **शश्वद् ऋद्धिः**= நித்தியவைஶ்வரியம், **क**=எவ்வளவு தூரத்தது, **इति चकितम् मां** = என வச்சமுற்றிருந்த வென்னை, **ते भक्तिः** = தேவரீரிடத்துப் பதிந்த வெனதன்பானது, **अमन्दीकृत्य** = மந்தமறச்

செய்து (விரைந்து தூண்டி), **वाक्यपुष्प उपहारम्** = (இத்துதியாகிய) சொன்மலர் தூவி வணங்குதலை (புஷ்பாஞ்சலியை), **ते चरणयोः** = தேவரீரது உபய திருவடிகட்கும், **आधात्** = ஒப்புவித்தது (அர்ப்பித்தது).

(வி - ரை) மலர்கள் வண்டுகட்குத் தேனைத் தந்து சேய்மைக்கண்ணுள்ளோரையு மவ்வாசனையான் மகிழ்விக்குமாறுபோல, இத்துதிவாக்கியங்களுமன்பின் வசமானோர்க்குப் பரசிவத்தின் மாட்சிமையைத் தந்து, கேட்டன் மாத்திரத்தாலேனையோரையும் பொருளியற்கைத் தன்மையான் மகிழ்விக்குமெனக் குறிக்க வாக்கிய புஷ்பமென்றார். தனது சுதந்தரமின்றிப் பத்தியாற்றூண்டப்பட்டுப் போற்றலாற் பேருளுடைய பெருமான் குற்றமனைத்துங் குறிக்கொள்ளாது பொறுப்பரென்பதாம். (31)

(அ - கை) துதியாரம்பத்திலரனது பெருமையின் முடிவைப் பிரம்மாதியரு முணராரென்றதற்கேதுவையுந் துதிசெய்வோரிறுமாப்பிற் கேதுவின்மையையுங் குறிப்பிற் காட்டுபவராய்த் துதியை முடிக்கின்றார்.

असितगिरिसमं स्यात्कज्जलं सिन्धुपात्रे
सुरतरुवरशाखा लेखनी पत्रमुर्वी ।
लिखति यदि गृहीत्वा शारदा सार्वकालं
तदपि तव गुणानामीश पारं न याति ॥ (३२)

(ப - ரை) **ईश** = இறைவ, **सिन्धुपात्रे** = கடலாகிய பாத்திரத்தில் (மைக்கூட்டில்), **कज्जलं** = மையானது, **असित गिरि समं स्यात्** = நீலமலைக்கொப்பாகவும், **लेखनी** = எழுதுகோல்

सुरतरु=கற்பகவிருட்சத்தின், **वरशाखा**=சிறந்தகொப்பாகவும், **पत्रम्**=(எழுதும்) ஏடு, **उर्वी**=பரந்தபூமியாகவும், **गृहीत्वा**=சேகரித்துக்கொண்டு, **शारदा**=சரஸ்வதிதேவி, **सार्वकालम्**=(தனது நீண்டவாயுள்) காலமனைத்தும், **यदिलिखति**=எழுதுகின்றுளெனினும், **तत् अपि** = அதனுனும், **तव गुणानां पारम्** = தேவரீரது சீலங்களின் வரம்பை, **नयाति**=அடைவதிலள்.

(வி - ரை) சருவசத்திகட்குஞ் சருவஞானங்கட்கு நிலயமாகும் பரதேவதையாகிய சரஸ்வதியுமறியாரென்னில், அவரது முற்றுணர்விற்குக் குறைவாமென்னின், முற்றுணர்வாவதுள்ளதை யுள்ளபடி யுணர்தலாம். ஈச்சுரனின் மகிமையிவ்வளவென்பதின்றி யளவில்லனவெனச் சாத்திரமறைதலாலளவில்லதை யளவின்றியதாக வறிதலே முற்றுணர்வாம். மாருகவுணரின் மயக்கவுணர்வாம். ஆதலாலவரது முற்றுமுணருந்தன்மைக் கூனமின்று. தேவியே யித்தகையராயின், குணங்களைப்புகழ்தலாகிய துதிபுரிவதினம்மைப்பற்றி நவிலுவதென்னை யென்பதாம். (32)

(அ - கை) இது தொடங்கிப் பின்னுள சுலோகங்கள் இந்நூற்றேன்றிய காலத்தும் பிற்றைக்காலத்துமிருந்த பெரியோர்களான் மொழிந்தனபோலும். இத்தோத்திரத்திற்கு விஷயரிவர், இஃதியற்றியாரிவரென விளக்குகின்றார்.

असुरसुरमुनीन्द्रैरर्चितस्येन्दुमौले-
ग्रथितगुणमहिम्नो निर्गुणस्येश्वरस्य ।
सकलगणवरिष्ठः पुष्पदन्ताभिधानो
रुचिरमलघुवृत्तैः स्तोत्रमेतच्चकार ॥ (३३)

(ப - ரை) **असुर सुर मुनीन्द्रैः** = அசுரராலுந் தேவராலுமாதவரிறைவராலும், **अर्चितस्य** = (மனமொழி மெய்களான்) வணங்கப்பட்டவராயும், **ग्रथित गुण महिम्नः** = தொடுக்கப்பட்ட குணமாட்சிமைகளை யுடையவராயும், **निर्गुणस्य** = (உண்மையிற்) குணங்கட்கப்பாற்பட்டவராயும், **ईश्वरस्य** = உலககருத்தாவாயும் (இலங்கும்), **इन्दुमौलेः** = பிறையணிச் சடைப் பெருமாற்கு, **एतत् स्तोत्रम्** = இத்துதியை, **सकल - गणवरिष्ठः** = சருவசிவகணங்கட்குந் தலைவராய, **पुष्पदन्ताभिधानः**=புஷ்பதந்தரென்னும் பெயருடையார், **रुचिरम्** = சுவை பொருந்திய, **अलघुवृत्तैः** = பெரிய செய்யுட்களால், **चकार** = இயற்றினர்.

(வி - ரை) சகுண சிவவுருவஞ் சருவ கலியாண குணாத்மக குணபீஜ குணாதாரமாதலின் அதனது மாட்சிமைக் குணங்கள் தோத்திரப்பா மாலையாகத் தொடுக்கப்படுதலால், **ग्रथित-गुण** என்றார். நிர்க்குண சிவவுருவங் குணாதீதமாயிருத்தலால் **निर्गुण** என்றார். சகுண நிர்க்குண வுருவங்களிரண்டு மொருகாலத்தோரிடத்தில் வியவகாரமாகவும் பாரமார்த்திகமாகவுங் கூடுமாதலால் **ईश्वर** என்றார். சிவபிரானது திருவருட்குரியரா யருகிருந்துக் குறிப்பறிந்துப் பணியியற்றுபவராய்க் கந்தருவர்த்தலைவரானதால் **गणवरिष्ठः** என்றனர். ருசிரம் என்றதால் கருணைவீரமாதி இரசங்க ளிந்நூலில் வருவனவற்றைக் கூறியதாம். பெரிய செய்யுட்களாலென்றதால் **रसैरुद्रैश्छिन्ना यमनसभलागः शिखरिणी** = யகணமகணமாதி கணவக்ஷரங்களாய், ஆறுடனும் பதினொன்றுடனும் பிரிக்கப்பட்டுப் பதினேழெழுத்துக்கள் கொண்டதொவ்வொரு பாதமாயினச் செய்யுள் சிகரிணீசந்தவிருத்த

மாகுமென்னுஞ் சந்தநூலின்படி, இந்த சிவமஹிம்நஸ் தோத்திர முப்பது செய்யுள்வரை சிகரிணீ சந்தத்தைக் கொண்ட செய்யுட்களாகும். (33)

(அ - கை) இத்துதியைப் படிக்குமுறையும் பயனு முரைக்கின்றார்.

अहरहरनवद्यं धूर्जटेः स्तोत्रमेत-
त्पठति परमभक्त्या शुद्धचित्तः पुमान्यः ।
स भवति शिवलोके रुद्रतुल्यस्तथाऽत्र
प्रचुरतरधनायुःपुत्रवान्कीर्तिमांश्च ॥ (३४)

(ப - ரை) **धूर्जटेः** = கங்கைச் சடைமுடிச் சம்புவைக் குறித்து, **अनवद्यम्** = யாதொரு குற்றமுமின்றிய, **एतत् स्तोत्रम्** = இத்துதியை, **अहर् अहः** = நாடோறும், **परमभक्त्या** = பெருகிய அன்புடன், **शुद्धचित्तः** = களங்கமற்ற மனத்தனுய, **यः पुमान्**=எம்மனிதன், **पठति**=ஓதுகின்றனே, **सः** = அவன், **शिवलोके**=கைலாயத்தில், **रुद्रतुल्यः** = உருத்திரனுக் கொப் பானவன், **भवति**=ஆகின்றன், **तथा**=அப்படியே, **अत्र**=இவ் வுலகத்தும், **प्रचुरतर** = மேன்மேற் பெருகுகின்ற, **धनआयुः** = செல்வமுமாயுளும் பெற்று, **पुत्रवान् कीर्तिमान्च** = புதல்வனை யும் புகழையுமுடையனுகின்றன்.

(வி - ரை) ஏனையோரின் புகழைப் போலன்றிச் சிவபெருமானது புகழ் மெய்ம்மையானதாலும், வாக்கு மனங்களின் றூய்மையோடுத் துதித்ததாலும், விமலனருள் விரைவிலடைந்ததாலும் **अनवद्यम्** என்றார். திரிபுராதியர் பரசிவத்திடத்திற் பத்தி பூண்டுங் களங்கமனத்தராய் மாண்

பிழந்தனர். தாருகவன முனிவர்களாதியோர் களங்கமற்ற மனத்தராயினும் பத்தியின்றித் தவமிழந்தனர். ஆதலாற் பத்தியுடன் களங்கமற்ற மனமென்றார். இத்துதி விரும்பி யவ்வை யருளுமென்றதாம். (34)

(அ - கை) இரண்டு சுலோகங்களா லிந்தநூற் பெருமையை யுரைக்கின்றார்.

महेशान्नापरो देवो महिम्नो नापरा स्तुतिः ।
अघोरान्नापरो मन्त्रो नास्ति तत्त्वं गुरोःपरम् ॥ (३५)

(ப - ரை) **महेशात्** = மஹேஶ்வரனைக்காட்டிலும், **न अपरः देवः** = வேறான மேற்றெய்வமின்றுதல்போலும், **अघोरात्**=அகோரமந்திரத்தினும், **न अपरः मन्त्रः**=வேறுயர்வுடை மந்திர மின்றுதல்போலும், **गुरोः परं तत्वम्** = குருவினும் மேலான மெய்ப்பொருள், **नास्ति** = இன்றுதல் போலும், **महिम्नः**=இம்மஹிம்நஸ்துதியினும், **न अपरा स्तुतिः**=வேறுயர்வுடைத்துதியின்று. (35)

दीक्षा दानं तपस्तीर्थं ज्ञानं यागादिकाः क्रियाः ।
महिम्नस्तवपाठस्य कलां नार्हन्ति षोडशीम् ॥ (३६)

(ப - ரை) **दीक्षादानम्** = உபதேசித்தலுமீதலும், **तपः** = நோன்பும், **तीर्थम्** = புண்ணிய நீராடலும், **ज्ञानम्** = கலை ஞானமும், **यागादिकाः क्रियाः** = யாக முதலிய நற்றொழில்களுமாய (இவற்றால் வரும் பயன்கள்), **तव महिम्नः पाठस्य** = தேவரீரது மஹிம்ந ஸ்துதியாகிய விதன் பாராயணப் பயனி

னது, **षोडशीम् कलाम्** = பதினாறிலொருகூற்றையும் (பெற்கு), **न अर्हन्ति** = தகுதியுடையனவன்று. இத்துதியைப் படித்தலினாலேயடையும் பெரும் பலனும் மேற் கூறிய வையின் பலன்களடங்குமென்பதாம். (36)

சிவ மஹிம்ந ஸ்தோத்திரம்

மூலமும் உரையும்

முற்றிற்று.

ஓம் தத்சத்.

॥ ध्यानम् ॥

ॐ तत् सत् । श्री गणेशाय नमः । ॐ नमः शिवाय ।

ॐ सहस्रशीर्षा पुरुषः । सहस्राक्षः सहस्रपात् । स भूमिं विश्वतो वृत्वा । अत्यतिष्ठद्दशांगुलम् ॥ कर्पूरगौरं करुणावतारं संसार-सारं भुजगेन्द्रहारम् । सदावसन्तं हृदयारविन्दे भवं भवानीसहितं नमामि ॥ २ ॥ पशूनां पतिं पापनाशं परेशं गजेंद्रस्य कृत्तिं वसानं वरेण्यम् । जटाजूटमध्ये स्फुरद्गांगवारिं महादेवमेकं स्मरामि स्मरारिम् ॥ ३ ॥ आत्मा त्वं गिरिजा मतिः सहचराः प्राणाः शरीरं गृहं पूजा ते विषयोपभोगरचना निद्रासमाधिस्थितिः । संचारः पदयोः प्रदक्षि-णविधिः स्तोत्राणि सर्वा गिरो यद्यत्कर्म करोमि तत्तदखिलं शंभो तवाराधनम् ॥ ४ ॥ ॐ तत् सत् ॥

॥ कर्पूर आरति ॥

ॐ नमस्ते अस्तु भगवन् विश्वेश्वराय महादेवाय त्र्यंबकाय त्रिपुरान्तकाय त्रिकाग्निकालाय कालाग्निरुद्राय नीलकण्ठाय मृत्युंजयाय सर्वेश्वराय सदाशिवाय श्रीमन्महादेवाय नमः ॥ १ ॥ ॐ तत्पुरुषाय विद्महे महादेवाय धीमहि तन्नो रुद्रः प्रचोदयात् ॥ २ ॥ प्रभुं प्राणनाथं विभुं विश्वनाथं जगन्नाथनाथं सदानंदभाजाम् । भवद्भव्यभूतेश्वरं भूतनाथं शिवं शंकरं शंभुमीशानमीडे ॥ ३ ॥ ॐ तत् सत् ॥

॥ पुष्पांजलि ॥

ॐ नमोऽस्त्वनन्ताय सहस्रमूर्तये सहस्रपादाक्षिशिरोरुबाहवे ॥ सहस्रनाम्ने पुरुषाय शाश्वते सहस्रकोटीयुग धारिणे नमः ॥ १ ॥

ॐ तद्ब्रह्म । ॐ तद्वायुः । ॐ तदात्मा । ॐ तत्सत्यम् । ॐ तत्सर्वम् । ॐ तत्पुरोर्नमः ॥ अन्तश्चरति भूतेषु गुहायां विश्वमूर्त्तिषु । त्वं यज्ञ स्त्वंवषट्कारस्त्वमिन्द्रस्त्वं रुद्रस्त्वं विष्णुस्त्वं ब्रह्मात्वं प्रजापतिः । त्वं तदाप आपोज्योतीरसोऽमृतं ब्रह्म भूर्भुवस्सुवरोम् ॥ २ ॥ ॐ ऋतं सत्यं परं ब्रह्म पुरुषं कृष्णपिङ्गलम् । ऊर्ध्वरेतं विरूपाक्षं विश्वरूपाय वै नमः ॥ ३ ॥ विश्वेश्वराय नरकार्णवतारणाय कर्णामृताय शशिशेखरधारणाय । कर्पूरकांतिधवलाय जटाधराय दारिद्र्यदुःखदहनाय नमः शिवाय ॥ ४ ॥ सर्वज्ञाय नमस्तुभ्यं सर्व कर्त्रे नमो-

ऽस्तुते । अविलुब्ध स्वरूपाय चिन्मात्राय नमोऽस्तुते ॥ ५ ॥ प्रमाणातीत देहाय नमश्शान्ताय तेजसे । सत्संवित्करणातीतनादनादान्तरात्मने ॥ ६ ॥ अनादि निधनेशाय शिवाय परमात्मने नमस्ते तत्वरूपाय विभवाय मितात्मने ॥ ७ ॥ ज्ञान ज्ञात्रे तथाज्ञेय व्यतिरिक्ताय ते नमः । ज्ञप्तिमात्रस्वरूपाय आनन्दब्रह्मणे नमः ॥ ८ ॥ अविद्या व्यतिरिक्ताय विद्यादेहाय ते नमः । स्वप्रमाणैक गम्याय स्वप्रकाशाय ते नमः ॥ ९ ॥ जय जय परमेश्वरेन्दुमौले जय जय शिव साम्बशङ्करेश । जय जय मृड भीम कृत्तिवासो जय जय पुर काल जगत्प्रसीद ॥ १० ॥ जय जय जगदेक मातरीश जय जय विनतात्म पालनेश । जय जय करुणामृताम्बुराशे जय जय गिरीश नमः प्रसीद ॥ ११ ॥ तव तत्वं न जानामि कीदृशोऽसि महेश्वर । यादृशोऽसि महादेव तादृशाय नमो नमः ॥ १२ ॥ ॐ यज्ञे न यज्ञ मय जन्त देवास्तानि धर्मांणि प्रथमा न्यासन् ॥ ते ह ना कम्महि मानः । सचन्त यत्र पूर्वे साध्याः सन्ति देवाः ॥ ॐ राजाधिराजाय प्रसह्य साहिने । नमो वयं वैश्रवणाय कुर्महे ॥ स मे कामान्काम कामाय मह्यं । कामेश्वरो वैश्रवणो ददातु । कुबेराय वैश्रवणाय । महाराजाय नमः ॥ ॐ विश्व तश्चक्षुरुत विश्वतो मुखो विश्वतोबाहुरुत विश्वतस्पात् । सम्बाहुभ्यांधमति सम्पतत्रैर्द्यावा भूमी जनयन्देव एकः । ॐ मन्त्र पुष्पाञ्जलिं समर्पयामि ॥—ॐ तत्सत् । नाना सुगन्ध पुष्पाणि यथा कालोद्भवानि च । पुष्पाञ्जलिं मया दत्तं गृहाण परमेश्वर ॥ ॐ तत् सत् ॥

॥ आशीर्वादः ॥

सर्वत्र मां रक्षतु विश्वमूर्तिर्ज्योतिर्मयानंद घनश्चिदात्मा ।
अणोरणीयानुरुशक्तिरेकः स ईश्वरः पातुभयादशेषात् ॥
ॐ सर्वे वै सुखिनस्सन्तु सर्वेसन्तु निरामयाः ।
सर्वे भद्राणि पश्यन्तु न कश्चिद् दुःखभाग्भवेत् ॥

ॐ तत्सत् ब्रह्मार्पणमस्तु ॥

॥ गुरु पुष्पाञ्जलि ॥

ॐ श्रीगणेशाय नमः । ॐ गुरुभ्यो नमः ।

ॐ नमोस्त्वनन्ताय सहस्रमूर्तये सहस्रपादाक्षिशिरोरुबाहवे ॥ सहस्रनाम्ने पुरुषाय शाश्वते सहस्रकोटीयुगधारिणे नमः ॥ १ ॥ विश्वं दर्पणदृश्यमाननगरीतुल्यं निजांतर्गतं पश्यन्नात्मनि मायया बहिरिवोद्भूतं यथा निद्रया । यः साक्षी कुरुते प्रबोधसमये स्वात्मानमेवाद्वयं तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ २ ॥ ॐ नमः प्रणवार्थाय शुद्धज्ञानैकमूर्तये । निर्मलाय प्रशान्ताय दक्षिणामूर्तये नमः ॥ ३ ॥ निधये सर्वविद्यानां भिषजे भवरोगिणाम् । गुरवे सर्वलोकानां दक्षिणामूर्तये नमः ॥ ४ ॥ नारायणं पद्मभवं वसिष्ठं शक्तिं च तत्पुत्रपराशरं च । व्यासं शुकं गौडपदं महान्तं गोविन्दयोगीन्द्रमथास्य शिष्यम् ॥ श्रीशङ्कराचार्यमथास्य पद्मपादं च हस्तामलकं च शिष्यम् । तं तोटकं वार्तिककारमन्यानस्मद्गुरून्संततमानतोऽस्मि ॥ श्रुतिस्मृति पुराणानामा-

लयं करुणालयम् । नमामि भगवत्पादं शङ्करं लोकशङ्करम् ॥ ७ ॥ अखंडमंडलाकारं व्याप्तं येन चराचरम् । तत्पदं दर्शितं येन तस्मै श्रीगुरवे नमः ॥ ८ ॥ त्वं पिता त्वं च मे माता त्वं बंधुस्त्वं च देवता । संसारप्रीति भंगाय तस्मै श्रीगुरवे नमः ॥ ९ ॥ ब्रह्मानंदं परमसुखदं केवलं ज्ञानमूर्तिम् । द्वंद्वातीतं गगनसदृशं तत्त्वमस्यादिलक्ष्यम् । एकं नित्यं विमलमचलं सर्वधीसाक्षिभूतम् । भावातीतं त्रिगुण-रहितं सद्गुरुं तन्नमामि ॥ १० ॥ नमस्ते नाथ भगवन् शिवाय गुरुरूपिणे । विद्यावतार संसिध्यै स्वीकृतानेकविग्रह ॥ ११ ॥

ॐ—यज्ञे न यज्ञ मय जन्त देवास्तानि धर्माणि प्रथमा न्यासन् । ते ह ना कम्महि मानः—। सचन्त यत्र पूर्वे साध्याः सन्ति देवाः ॥ ॐ—राजाधिराजाय प्रसह्य साहिने । नमो वयं वैश्रवणाय कुर्महे ॥ स मे कामान्काम कामाय मह्यं । कामेश्वरो वैश्रवणो ददातु । कुबेराय वैश्रवणाय । महाराजाय नमः ॥ ॐ—विश्व तश्च क्षुरुत विश्वतो मुखो विश्वतो बाहुरुत विश्वतस्पात् सम्बाहुभ्यां धमति सम्पतत्रैर्द्यावा भूमी जनयन्देव एकः ॥ ॐ—मन्त्रपुष्पाञ्जलिं समर्पयामि ॐ—नाना सुगन्ध पुष्पाणि यथा कालोद्भवानि च । पुष्पाञ्जलिं मया दत्तं गृहाण परमेश्वर ॥

ॐ तत्सत् शिवार्पणमस्तु ॥

ஸ்ரீ வீர-சுப்பைய சுவாமிகளால் செய்தவை.

	ரூ.	அ.	ப.
வாசிட்டம் (6000) செய்யுளும்-உரையும் ...	8	0	0
வாசிட்டம் (32,000) (வசனம்) முதல் வால்யம் ...	2	8	0
ஸ்ரீ கணேச கீதை முதல் வால்யம் (சுலோகமும் பதவுரையும் வியாக்கியானமும்)...	2	0	0
கண்டன கண்ட காத்தியம் (வசனம்) ...	1	8	0

விலாசம்—

ஸ்ரீ அனந்தானந்த சுவாமி,

ஆனந்தாசிரமம்,

4/5, வேதவிநாயகர் ரோட்டு,

வேப்பேரி, மதறாஸ்.

ஹிந்தி பிரசார் பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.